E Paper

மின்னிதழ்

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 27 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வருட. 90 இல. 202 | Saturday 27 August, 2022 | 14 பக்கங்கள்

## 300 ஆட்டோக்களை மின்மயமாக்க ஏற்பாடு

### UN திட்டத்தின் கீழ் RMB நடவடிக்கை



இலங்கை எதிர்நோக்கும் பெற்றோலிய நெருக்கடிக்கு தீர்வாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் 300 முச்சக்கர வண்டிகளை மின்மயமாக்கும் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக

06

### நிபந்தனையுடன் ஜனாதிபதி பொது மன்னிப்பு

# ரஞ்சன் விடுதலை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பிரபல நடிகரும் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதியின் நிபந்தனையுடனான பொது மன்னிப்பில் நேற்று (26) விடுதலை செய்யப்பட்டார்.

இனிமேல் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான அறிக்கைகளையோ செயற்பாடுகளையோ வெளியிடக் கூடாதென்ற நிபந்தனை விதித்து ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை ஆவணங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கையொப்பமிட்டார். ரஞ்சன் ராமநாயக்க நேற்று (26) பிற்பகல் 2.45 மணியளவில் விடுவிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையின் பிரதான வாயிலிலிருந்து வெளியே வந்தார். அவரை வரவேற்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அமைச்சர்கள், கலைஞர்கள், அவரின் ஆதரவாளர்கள் என பலரும் வருகை தந்திருந்தனர்.

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் திகதி அலரி மாளிகைக்கு வெளியில் அவர் தெரிவித்த கருத்துக்காக 2021 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தினால் நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி, ரஞ்சன் ராமநாயக்க, சுமார் 01 வருடமும் 07 மாதங்களும் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார்.

சிறைச்சாலையிலிருந்து வெளியே வந்த ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சிலர் மாலை அணிவித்தும் மலர்ச் செண்டுகளை வழங்கியும் தங்களது அன்பை வெளிப்படுத்தினர். சிலர் அவர் அருகில் சென்று கட்டியணைத்து அன்பை வெளிப்படுத்தினர். சிலர் அவரை கட்டியணைத்து முத்தமிட்டனர். கூட்ட நெரிசலிலுக்கு மத்தியில் அவர் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் எதிர்க்கட்சித் தலைவரின் காரில் ஏறி புறப்பட்டுச் சென்றார்.

ரஞ்சன் ராமநாயக்க தனது விடுதலைக்காக சமர்ப்பித்த சத்தியக் கடதாசியில், தான் தெரிவித்த கூற்று முழுமையாக

06

## யாழ்ப்பாணத்தில் நல்லிணக்க மையம்

### இராணுவத் தளபதியினால் திறந்து வைப்பு



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பலாலி சந்தி பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நல்லிணக்க மையத்தை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே நேற்று (26) திறந்து வைத்தார்.

ஆரோக்கியம் நிறைந்த நோயற்ற சந்ததியினரை உருவாக்குவதற்கு இராணுவத்தின் பங்களிப்புடன் இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தினை உருவாக்கும் முகமாக இந்த நல்லிணக்க மையம் திறந்து வைக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. புதிய இராணுவத் தளபதியாக பதவியேற்ற பின்

06

### தரை, வான், கடல் மார்க்கமான அறிவு மட்டுமன்றி

## எமது பாதுகாப்பு படையினருக்கு தொழில்நுட்ப அறிவும் அவசியம்

### எதிர்காலத்தில் சைபர் தளத்திலும் யுத்தம் நிகழ வாய்ப்பு

**சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வர்ணமளிப்பு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை**




எதிர்காலத்தில் தரை, வான், கடல் மாத்திரமன்றி சைபர் தளத்திலும் யுத்தம் நிகழலாம். எனவே எமது வீரர்கள் அவ்வாறான தொழில்நுட்ப யுத்தத்துக்குத் தேவையான அறிவைப் பெற்றிருக்க வேண்டும்

06

## இலங்கைக்கான பயண அறிவுறுத்தல் நீக்கம்

### பிரிட்டன், நோர்வே நாடுகளும் அறிவிப்பு



பிரிட்டன் அரசாங்கம், இலங்கைக்கான பயண அறிவுறுத்தலை நேற்று நீக்கியுள்ளது. இலங்கைக்கு மேற்கொள்ளும் அத்தியாவசிய பயணங்களைத் தவிர ஏனைய பயணங்களுக்கு எதிராக இனி அறிவுறுத்தல்களை விடுப்பதில்லையென்றும் பிரிட்டன் அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் நோர்வே, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளும் இலங்கைக்கான பயண அறிவுறுத்தல்களை நீக்கியுள்ளன.

06

## உணவு உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து தன்னிறைவு கிராமங்கள்

### நாடு முழுவதும் உருவாக்கு அரசு திட்டம் - பிரதமர்



உணவு உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து நாடு முழுவதும் தன்னிறைவு பெற்ற கிராமங்களை உருவாக்குவது அரசாங்கத்தின் நோக்கம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

வானிலிருந்து ஒரு சொட்டு நீரைக் கூட கடலுக்குச் செல்ல விடப் போவதில்லை என்ற பராக்கிரமபாகுவின் கருத்தியலின் பிரகாரம் செயற்படவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அடுத்த 100 நாட்களுக்குள், கிராம மட்டத்தில் உணவு பாதுகாப்பு குழுக்களை நிறுவி, பயிர்ச் செய்கையை அதிகரிக்குமாறும் மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நேற்றுமுன்தினம்

06

### மஹாபொல நிலுவையிலுள்ள

## கொடுப்பனவுகள் அடுத்த வாரம் முதல் வழங்குவதற்கு கல்வியமைச்சு திட்டம்



இரண்டு மாதங்களாக வழங்கப்படாமல் இருந்த பல்கலைக்கழக மாணவர்களின் மஹாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவுகளை அடுத்த வாரம் முதல் வழங்குவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதன்படி, ஜூன், ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகள் அடுத்த வாரமளவில் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகைகளுக்கு தேவையான பணத்தை வழங்க திறைசேரி சம்மதம் தெரிவித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று தெரிவித்தார். நிலுவைத் தொகையை

06

## மத்திய வங்கி ஒதுக்கும் நிதியிலேயே எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு

### QR விநியோக முறை நெருக்கடிக்கு நிரந்தர தீர்வாகாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கியினால் ஒதுக்கப்படும் நிதியின் அடிப்படையிலேயே எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுகிறதென அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியினால் வழங்கப்படும் நிதியைக் கொண்டு இறக்குமதி செய்யும் எரிபொருளை சிறந்த

06



பாடசாலை மாணவர்களின் போஷாக்கை மேம்படுத்தும் நோக்குடன் 3,000 மெற்றிக் தொன் உலர் உணவை அமெரிக்கா நன்கொடையாக வழங்கியது. வத்தளை முத்துராஜவெல, ஸ்பெக்ரா களஞ்சிய சாலையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்திடம் அமெரிக்க தூதுவர் திருமதி ஜூலி சங் அதனை உத்தியோகபூர்வமாக கையளித்த போது...



கொழும்பு உட்பட 07 மாவட்டங்களில்

**கொரோனாவை விடவும் மிகத் தீவிரமாக பரவும் டெங்கு** 03



மோசமான கடன் நெருக்கடிக்கு தீர்வுகாண

**இலங்கைக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்துள்ள ஜப்பான்** 03

### கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த

## கொவிட் தடுப்பூசியை செலுத்த மக்களுக்கு மீண்டும் அறிவுறுத்து

### டாக்டர் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தல்



நாட்டில் ஒரு இலட்சம் பேர் மட்டுமே கொவிட் 4ம் தடுப்பூசி அல்லது இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொவிட் பரவலை கட்டுப்படுத்த வேண்டுமாயின் நாட்டில் அதிகளவானோர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

06

## அரசியல்கைதிகள் விடுதலை உண்மையானதாக வேண்டும்

### ஜனாதிபதி சட்டத்தரணி K.V.தவராசா அறிக்கை



நல்லாட்சிக் காலத்தில் நடைபெற்றதைப் போன்று அரசியல் கைதிகளின் விடுதலை கண்துடைப்பு நாடகமாக அமைந்துவிடக் கூடாது என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் கருத்துகளை வெளியிட்டமைக்காக 2017, 2019 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் சிலரை விடுதலை

06

### பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி

## நாடளாவிய ரீதியில் TNA கையெழுத்து வேட்டை

### மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக சுமந்திரன் தெரிவிப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வலியுறுத்தி, முன்னதாக நாடளாவிய ரீதியில் முன்னெடுத்திருந்த கையெழுத்து வேட்டையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய உடனடித்தேவை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்நாட்டிலுள்ள பிரஜைகள் அனைவரும்

06

### ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறிய

## தானிஷ் அலி உள்ளிட்ட ஏழு பேருக்கு பிணை

### கோட்டை நீதவான் நீதிமன்று உத்தரவு




ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தானிஷ் அலி உள்ளிட்ட 07 சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

06

## செப்டெம்பர் மாதம் முதல் நீர்க்கட்டண அதிகரிப்பு

### தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவிப்பு



நீர்க்கட்டணமானது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

06

## பாகிஸ்தானில் வெள்ள அனர்த்தத்தில் 937 பேர் பலி

### அங்கு தேசிய அவசரநிலை பிரகடனம்



பாகிஸ்தானில் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அழிவுகளையடுத்து, அந்நாட்டு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தேசிய அவசரநிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் கடந்த ஜூன் முதல் உயிரிழந்தவர்களின்

06

### மோ. சைக்கிளில் கணவனுடன் பயணித்த

## கர்ப்பிணிப் பெண் தவறி விழுந்து ஸ்தலத்தில் மரணம்

### காரைநகரில் நேற்று சோக சம்பவம்



**யாழ்.விசேட நிருபர்**

கணவனுடன்மோட்டார் சைக்கிளில் பயணித்த கர்ப்பிணிப் பெண் கீழே தவறி விழுந்து மரணித்த சம்பவமொன்று யாழ்.பொன்னாலை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

06

## தங்கம் கடத்திய ஒன்பது இலங்கையர் மீது விசாரணை

### ஹைதராபாத் விமான நிலையத்தில் தடுத்து வைப்பு




தங்கம் கடத்திய கொழும்பை சேர்ந்த 9 பேர் ஹைதராபாத் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

சுமார் 3.8 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்த முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் ஒன்பது இலங்கையர் நேற்று

06

## தொழிலாளர் மேம்பாட்டு நல்லெண்ண தூதுவராக ரஞ்சன் நியமனம்

உலகம் முழுவதும் பணிபுரியும் புலம் பெயர் இலங்கை தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக நல்லெண்ண தூதுவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நியமித்துள்ளதாக தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்கள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் நேற்று (26) வெள்ளிக்கிழமை ரஞ்சன் ராமநாயக்க விடுதலையானதையடுத்து, இந்த நியமனக்

06

# சர்வதேச செய்திகள்

## அமெரிக்க பாடசாலையில் மீண்டும் பிரம்படி அறிமுகம்



அமெரிக்காவின் மிஸோரி மாநிலத்தில் உள்ள ஒரு பாடசாலையில் மீண்டும் பிரம்படி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்தத் தண்டனையை பாடசாலை 2001ஆம் ஆண்டு கைவிட்டது.

மாணவர்களின் பெற்றோருக்கும் அது குறித்துத் தகவல் அளிக்கப்பட்டுவிட்டதாக தி கார்டியன் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்கவே பிரம்படியை மீண்டும் செயற்படுத்துவதற்கு பாடசாலை முடிவு எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு பாடசாலை நடத்திய ஆய்வில் பெற்றோர் கூடுதல் ஒழுங்கு நடவடிக்கைகள் வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

இன்னும் சிலர் மாணவர்கள் பாடசாலையில் இருந்து தற்காலிகமாக நீக்கப்படுவதற்குப் பதில் வேறொரு தண்டனை வேண்டும் என்று தெரிவித்திருந்ததாக தி கார்டியன் கூறியது.

அதனால் பிரம்படி மீண்டும் கொண்டுவரப்பட்டதாகப் பாடசாலை தெரிவித்தது.

தங்கள் பிள்ளைகளைப் பிரம்படிக்கு உட்படுத்தப் பெற்றோர்கள் அனுமதி வழங்கலாம். பாடசாலை தலைமை ஆசிரியரால் மட்டுமே பிரம்படி அளிக்கப்படும் என்று கூறப்பட்டது.

## ரஷ்யப் படையை 10 வீதம் அதிகரிக்க புட்டின் ஆணை



ரஷ்ய இராணுவத்தில் எதிர்வரும் மாதங்களில் 137,000 படையினரை இணைக்கும் ஆணையில் அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கைச்சாத்திட்டுள்ளார்.

தற்போது ரஷ்ய இராணுவத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான படையினர் மற்றும் சுமார் 900,000 சிவில் பணியாளர்கள் உள்ளனர்.

இந்நிலையில் பெரும் பணச் சலுகையுடன் நாடு முழுவதும் இருந்து படைகளை திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே புட்டினின் ஆணை வந்துள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் 70 முதல் 80,000 ரஷ்ய துருப்புகள் கொல்லப்பட்டு அல்லது காயமடைந்திருப்பதாக மேற்கத்திய அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். கைதிகளின் வீடுதலை மற்றும் பணச் சலுகைகளுடன் சிறைச்சாலைகளிலும் ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறுகிய கால போர் நடவடிக்கை ஒன்றாகவே உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தபோதும், உக்ரைனின் கடுமையான எதிர்ப்பால் ரஷ்யாவின் முன்னேற்றம் ஸ்தம்பித்ததோடு அண்மைய வாரங்களில் முன்னரங்கு பகுதிகளில் இருந்து நகர்வது கடினமாகி உள்ளது.

## அவுஸ்திரேலிய கடற்படையுடன் இந்திய கடற்படை கூட்டு பயிற்சி



அவுஸ்திரேலிய ரோயல் கடற்படையுடன் இந்திய கடற்படைக் கப்பலான ஐ.என்.எஸ் சுமேதா கடல்சார் கூட்டுப் பயிற்சியில் பங்குபற்றியுள்ளது. பலம் வாய்ந்த கடற்படைகளுக்கிடையிலான தொடர்புகளையும் இயங்கு நிலையையும் மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இக்கப்பல் இக்கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சுதந்திர தினத்தின் நிமித்தம் அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இக்கப்பலில், இந்திய–அவுஸ்திரேலிய பாதுகாப்பு படையதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இந்திய கொடியேற்ற வைபவமும் இடம்பெற்றது.

தென் கிழக்கு இந்து சமுத்திர பிராந்தியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இக்கடற்படைக் கப்பல், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள ரோந்து கப்பல்களில் ஒன்றாகும். சுதந்திரமான முறையில் பல்வகைமை ஒத்துழைப்புக்களை கடல் சார் ரோந்து நடவடிக்கைகளுக்கு இக்கப்பல் நல்கி வருகிறது.

பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்பு சவால்களுக்கு மத்தியில் இந்து– பசுபிக் பிராந்தியத்தின் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்தீரத்தன்மையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு சுமேதா கப்பல் இக்கூட்டு பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

## பாகிஸ்தானில் அடைமழையால் முப்பது மில்லியன் பேர் பாதிப்பு



பாகிஸ்தானில் தொடரும் அடைமழையாலும் வெள்ளத்தாலும் கடந்த சில வாரங்களாக 30 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜூன் மாதத்திலிருந்து இதுவரை வெள்ளத்திற்கு 900க்கும் மேற்பட்டோர்பலியாகியுள்ளனர். சுமார்1,300 பேர் காயமுற்றனர்.

பாதிக்கப்பட்ட சுமார் 184,000 பேர் நிவாரண முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தானின் சிந்து மாநிலம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த வட்டாரக் குடியிருப்பாளர்களுக்கு ஒரு மில்லியன் கூடாரங்கள் தேவைப்படுவதாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பாகிஸ்தானின் சிந்த் மாகாணம், கைபர் பக்துன்க்வா, பலோசிஸ்தான் ஆகிய மாகாணங்கள் தான் வெள்ளத்தால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

பருவநிலை மாற்றத்தால் நிகழும் பேரிடருக்கு உடனடி உதவி தேவைப்படுவதாகப் பாகிஸ்தானிய பருவநிலைத்துறை அமைச்சர் ஷெரி ரேஹ்மான் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உதவுவதற்கு நிதியுதவி கேட்டு, அந்நாட்டு அரசாங்கம் உலகளாவிய கோரிக்கையை விடுத்துள்ளது. சேதமடைந்த கட்டமைப்பைச் சீரமைக்கவும் அது நிதியுதவி கேட்டுள்ளது.

கடந்த ஜூன் நடுப்பகுதியில் பருவ மழை ஆரம்பித்தது தொடக்கம் 3000க்கும் அதிகமான கிலோ மீற்றர் வீதி, 130 பாலங்கள் மற்றும் 495,000 வீடுகள் சேதம் அடைந்திருப்பதாக தேசிய இடர் முகாமைத்துவ அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

சிந்தில் ஒகஸ்ட் மாதத்தில் பதிவாகும் சராசரி மழைவீழ்ச்சியை விடவும் இம்முறை 784 வீத மழைவீழ்ச்சி பதிவாகி இருப்பதோடு பலுகிஸ்தான் மாகாணத்தில் அது 500 வீதமாக உள்ளது. சிந்த் மாகாணத்தில் முப்பத்து மூன்று மாவட்டங்கள் பேரிடர் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## கதிர்வீச்சு அனர்த்தத்திலிருந்து நூலிழையில் தப்பிய ஐரோப்பா



உக்ரைன் மின் கட்டமைப்பில் இருந்து ரஷ்ய ஆக்கிரமிப்பில் உள்ள அணு நிலையம் துண்டிக்கப்பட்டபோது ஐரோப்பா சாத்தியமான கதிர்வீச்சு அனர்த்தம் ஒன்றை எதிர்கொண்டதாக உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

சபொரிஸ்ஸியா என்ற அணு நிலையத்தில் மாற்று மின்சாரம் வழங்கப்பட்டதை அடுத்தே அது பாதுகாப்பாக இயங்க ஆரம்பித்தது என்று அவர் மேலும் கூறினார்.

தீச் சம்பவங்களால் அணு நிலையத்தின் மின் இணைப்புகள் சேதமடைந்து மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் மிகப்பெரிய அணு நிலையமாக இருக்கும் இதன் வளாகத்திற்கு அருகில் தொடரும் மோதல்கள் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

“மின் துண்டிப்பை அடுத்து தானியக்க செயற்பாடு மற்றும் ஆலையில் உள்ள எமது ஊழியர்கள் எதிர்வினையாற்றவில்லை என்றால், டீசல் மின் பிறப்பாக்கிகள் இயங்காவிட்டால் கதிர்வீச்சு விபத்தின் விளைவுகளை நாம் சந்திக்க வேண்டி இருந்திருக்கும்” என்று செலன்ஸ்கி கூறினார்.

ரஷ்ய ஷெல் தாக்குதலாலேயே இந்த சேதம் ஏற்பட்டிருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி குற்றம்சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த அணு நிலையத்தை சூழவிருக்கும் பகுதிகளின் கதிர்வீச்சு அளவு சாதாரண நிலையிலேயே காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா அங்கு ஆயுதங்களை குவித்திருப்பதாகவும் ஆலையைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்து தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும் உக்ரைன் கூறுகிறது.

அதற்கு நேர்மாறாக, உக்ரைன்தான் அந்தப் பகுதியிலிருந்து பொறுப்பற்ற முறையில் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்கள் நடத்துவதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

சபொரிஸ்ஸியா அணுவாலையிலிருந்து ரஷ்யத் துருப்புகளை அகற்ற, சர்வதேச அணுசக்தி ஆணையத்தின் உதவியை உக்ரைன் நாடியுள்ளது.

## இவ்வாண்டு கொவிட் மரணம் ஒரு மில்லியனைத் தாண்டியது



இவ்வாண்டில் இதுவரை ஒரு மில்லியன் பேர் கொவிட்–19 நோய்த்தொற்றால் உயிரிழந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

நோய்ப்பரவல் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை கொவிட் தொற்றால் உலகளவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6.4 மில்லியன் ஆனது. அது வருத்தமளிக்கும் மைல்கல் என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டது.

சுகாதாரத்துறை ஊழியர்கள், மூத்தோர், எளிதில் நோய்த்தொற்றுக்கு ஆளாவோர் ஆகியோருக்குத் தடுப்பூசி போட அரசாங்கங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டது. இவ்வாண்டு ஜூன் மாதத்துக்குள் அனைத்து நாடுகளிலும் குறைந்தது 70 வீதத்தினர் தடுப்பூசி போட்டுக்கொள்ள அந்த அமைப்பு இலக்கு நிர்ணயித்திருந்தது.

ஆனால் 130 நாடுகள் இன்னும் அந்த இலக்கை எட்டவில்லை. உலக மக்கள்தொகையில் சுமார் 33 வீதத்தினர் இன்னும் கொவிட் தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை.

## அமேசனில் 15 ஆண்டுகள் இல்லாத கடும் காட்டுத் தீ



பிரேசிலின் அமேசன் மழைக்காடுகளில் 15 ஆண்டுகள் காணாத அளவில் காட்டுத்தீ இவ்வாரம் பரவியுள்ளது.

கடந்த திங்கட்கிழமையன்று (ஓகஸ்ட் 22) 3,358 காட்டுத்தீச் சம்பவங்களைச் செயற்கைக்கோள் படங்கள் காட்டின. அது, 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து இதுவரை 24 மணிநேர இடைவெளியில் பதிவான மிக அதிகமான காட்டுத்தீச் சம்பவங்களின் எண்ணிக்கையாக உள்ளது.

அமேசன் காட்டுத் தீச் சம்பவங்கள் திட்டமிட்டவையல்ல என்று பிரேசிலிய விண்வெளி நிறுவனம் தெரிவித்தது.

காடுகள் எரிக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் அதிகரித்திருப்பதால் தீச்சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் இருப்பதாக அது விளக்கியது.

சட்டவிரோதமாகச் செயல்படும் விவசாயிகளும் பண்ணைக்காரர்களும் மரங்களை எரித்துக் காடுகளை அழிப்பதன் மூலம் அமேசன் மழைக்காடுகளில் தீ பரவுவதாக நிபுணர்கள் கருதுகின்றனர். பிரேசிலில் அத்தகைய காடழிப்பு நடவடிக்கைகள் பெரிய அளவில் அதிகரித்திருக்கின்றன.

## உலகளவில் குரங்கம்மை பாதிப்பு 20 வீதம் வீழ்ச்சி



உலக அளவில் குரங்கம்மைத் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை கடந்த வாரம் 20 வீதத்துக்கு மேல் குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை குறைந்திருந்தாலும் அமெரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் தொற்று பரவி வருகிறது.

குரங்கம்மைத் தடுப்புமருந்துகளின் அளவு குறைவாகவே உள்ளது. அந்தப் பற்றாக்குறையைக் கையாள அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், குறைந்த அளவில் தடுப்புமருந்தைச் செலுத்துகின்றன.

ஆனால் அவ்வாறு செய்வது பாதுகாப்பானதா என்று குரங்கம்மைத் தடுப்புமருந்துத் தயாரிப்பு நிறுவனமான பவரியன் நோர்டிக் கேள்வி எழுப்பியுள்ளது.

குரங்கம்மைத் தடுப்புமருந்தைக் குறைந்த அளவில் செலுத்துவது பற்றி உலக சுகாதார அமைப்பு மறுஆய்வு செய்கிறது. ஜூலையில் குரங்கம்மைத் தொற்று தொடர்பான விழிப்பு நிலையை உலக சுகாதார அமைப்பு மிக அதிகமாக உயர்த்தியிருந்தது.

கொவிட் நோய்ப்பரவலோடு குரங்கம்மையும் ஒரு பொதுச் சுகாதார நெருக்கடி என்று வகைப்படுத்தப்பட்டது. உலக அளவில் இவ்வாண்டில் குரங்கம்மைத் தொற்றால் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 45ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## சீனாவில் கடும் வரட்சியில் நீரைத் தேடும் அதிகாரிகள்



சீனாவில் ஏற்பட்டுள்ள வரட்சியால் தினசரி பயன்பாட்டுக்குத் தேவைப்படும் தண்ணீரை உள்ளூர்க் குடியிருப்பாளர்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க அதிகாரிகள் திணறுகின்றனர்.

அங்கு முன்னெப்போதும் இல்லாத அளவில் கடும் வெப்பம் சுட்டெரிக்கிறது. நாட்டின் பல பகுதிகளில் வரட்சி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே சீனாவின் வடிகால் வசதிகளை மேம்படுத்த அதிகாரிகள் முயன்று வருகின்றனர். நீர் வளங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குச் சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் இலையுதிர் காலத்தின் விளைச்சல் இம்முறை கடுமையாகப் பாதிப்படையக்கூடும் என்று சீனா எச்சரித்துள்ளது. கடும் வெப்பத்தால் 3 மில்லியன் ஹெக்டருக்கும் அதிகமான விளைநிலம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் இப்போதே அறுவடை செய்து நெல்லைச் சேமித்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வரும் மாதங்களில் அரிசி விளைச்சலைப் பாதுகாக்க, அதிகாரிகள் கிட்டத்தட்ட 1.5 பில்லியன் டொலரை ஒதுக்க உறுதியளித்துள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2022 ஓகஸ்ட் 27 சனிக்கிழமை



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.13 |
| அஸர் | 03.22 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 11

ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: அதிதி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | சுகம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | முயற்சி |
| கும்பம் | மறதி |
| மீனம் | பாராட்டு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

இறப்பதற்கு முன்

# மீண்டும் தேர்தலில் வென்று மக்களுக்கு சேவை செய்வேன்

மரணிப்பதற்கு முன்னர் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு மக்களுக்கு சேவையாற்ற விரும்புகின்றேன். எனவே எனக்கு மன்னிப்பு வழங்கியமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி கூறுகின்றேன். நான் மக்கள் சார்பானவன் என்பதால் அரசியலில் சுயாதீனமாகவே செயற்படுவேனென்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.



ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் நேற்று (26) வெள்ளிக்கிழமை விடுதலையான அவர், வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து வெளியேறும் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

எனக்கு கிடைத்துள்ள விடுதலைக்கு நன்றி கூறுகிறேன். மக்களுக்காகவே நான் இந்த தீர்மானத்தை எடுத்தேன். நான் மரணிப்பதற்கு முன்னர் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் அரசியலுக்கு பிரவேசித்து மக்களுக்கு சேவையாற்ற விரும்புகின்றேன். அதற்கமைய எனக்கு விடுதலை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

06

# இலங்கைக்கு பயணம் செய்யும் பிரஜைகளுக்கு இந்தியா அறிவுறுத்தல்

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்குத் திட்டமிடும் இந்தியப்பிரஜைகளை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தியிருக்கும் அந்நாட்டு அரசாங்கம், இலங்கைக்கு அத்தியாவசிய பயணங்களை மேற்கொள்வதற்கு முன்பாக நாணயமாற்று இயலுமை மற்றும் எரிபொருள் கிடைப்பனவு ஆகிய விடயங்கள் தொடர்பில் விசேடமாக கவனத்திற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

பாரிய பொருளாதார நெருக்கடியின் விளைவாகக் கடந்த சில மாதங்களாக நாட்டில் உணவு மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்குத் தீவிர தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் அதனையடுத்து நாடு முழுவதும் எதிர்ப்புப்போராட்டங்களும் வலுவடைந்திருந்தன.

'இலங்கையின் நிலைவரங்களை நாம் தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்துவருகின்றோம். எமது புரிதலின் பிரகாரம் இப்போதும் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான மிகப்பெரும் வளமாக இந்தியர்களே

06

மோசமான கடன் நெருக்கடிக்கு தீர்வுகாண

# இலங்கைக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்துள்ள ஜப்பான்

### அனைத்து கடன் வழங்குனர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு

இலங்கையை அதன் மோசமான கடன் நெருக்கடியிலிருந்து மீட்பதை நோக்கமாகக் கொண்ட அனைத்து கடன் வழங்குனர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்ய ஜப்பான் தயாராக உள்ளது.



இலங்கையின் நிதி பற்றிய தெளிவின்மை உள்ள நிலையில் அதில் இலங்கையின் முன்னணி கடன் வழங்குனரான சீனா இணையுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

2020ம் ஆண்டின் இறுதியில் இருதரப்பு அடிப்படையில் இலங்கையின் கடன் 6.2 பில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாக ரொயட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இதனை தீர்ப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்தும் பட்சத்தில் சீனாவுடனான அத்தகைய சந்திப்பிற்கு ஜப்பான் தலைமை தாங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன்களை மறுசீரமைப்பது தொடர்பான பேச்சுக்கு பிரதான கடன் வழங்கும் நாடுகளுக்கு அழைப்பு விடுக்குமாறு ஜப்பானை இலங்கை கோரும் என முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டபோது அடுத்த மாதம் டோக்கியோவில் பிரதமர் ஃபுமியோ கிஷிடாவுடன் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

06

பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கு

# 3,000 மெற்றிக் தொன் உலர் உணவை நன்கொடையாக வழங்கியது அமெரிக்கா

நாடு முழுவதுமுள்ள பாடசாலை மாணவர்களுக்குப் போஷாக்கை வழங்குவதற்காக அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் (USDA) ஊடாக Save the Children அமைப்பின் பங்களிப்புடன் 320 மெற்றிக் தொன் கடலை மூடைகளை அமெரிக்கா நேற்று நன்கொடையாக வழங்கியது. இந்த நன்கொடை, 3,000 மெற்றிக் தொன் உணவு நன்கொடையின் ஒரு பகுதியாகும்.



அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த மற்றும் சுகாதார அமைச்சு, தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் Save the Children ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்நன்கொடையைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

"அமெரிக்க மக்கள் வழங்கும் இந்த நன்கொடை மிகவும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய குழந்தைகளை இலக்காகக் கொண்டுள்ளதுடன் அவர்களின் பசியை விடவும் அவர்களின் பாடசாலைக்கல்வியில் அவர்கள் கவனம் செலுத்துவதற்கு அவர்களுக்கு உதவுகிறது. போசாக்கை வழங்கும் ஒவ்வொரு வேளை உணவும், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்டுள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு அனைத்து இலங்கையர்களுக்கும் உதவுவதற்கு அமெரிக்கா கொண்டுள்ள

06

கொழும்பு உட்பட 07 மாவட்டங்களில்

# கொரோனாவை விடவும் மிகத் தீவிரமாக பரவும் டெங்கு

### தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் 03 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி, பிரதேசங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். கடந்த மாதம் 11 ஆயிரத்து 500 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், ஒகஸ்ட் மாதத்தில் 05 ஆயிரத்து 600 ஆக குறைவடைந்துள்ளது.



**செப். 01,02,03ஆம் திகதிகளில் டெங்கு ஒழிப்பு திட்டம்**

நாகல பிரதேசத்தில்

# நபரொருவர் வெட்டி கொலை; பெண் கைது

பிபிலை, நாகல பிரதேசத்தில் 66 வயது நபரொருவரை வெட்டிக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப் பெண் நடத்தும் கடைக்கு வந்த நபரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த நபர் நாகல பிரதேசத்திலுள்ள பெண்ணின் கடைக்கு வந்த போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது இப்பெண்ணுக்கும் உயிரிழந்த நபருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் பெண் அந்த நபரை வெட்டியுள்ளதாகவும், கடையிலிருந்து பெற்றோலை எடுத்து வந்து இறந்தவரின் உடலில் ஊற்றி தீ வைத்து கொளுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் மஹியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டதோடு கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபிலை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# புத்தளம் சாஹிராவில் குளவிக் கொட்டு

### 17 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

புத்தளம், சாஹிரா தேசியப் பாடசாலையில் கல்வி கற்கும் 17 மாணவர்கள் குளவிக் கொட்டுக்கிலக்காகி புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

15 வயதுக்குறைப்பட்ட 08 மாணவர்களும் 15 வயதுக்கு மேற்பட்ட 09 மாணவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியரொருவர் தெரிவித்தார். குளவி கொட்டுக்கிலக்காகிய மாணவர்களுக்கு தொடர்து சிகிச்சையளிக்கப் பட்டுவருவதாக நேற்று அவ்வைத்தியர் மேலும் தெரிவித்தார்.

நில்வளா கங்கையில்

# நீராடிய 12 பேரில் நால்வர் மாயம்

அக்குரஸ்ஸ, பிட்டபெத்தர பகுதியில் நில்வளா கங்கையில் குளிக்கச் சென்ற நான்கு பேர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர். நில்வளா கங்கையில் உடஹா எல்ல பகுதியில் நீராடிக் கொண்டிருந்த 12 பேரில் நால்வரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

# கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா

இரட்ணம் பவுண்டேசன்UK மற்றும் செல்வநாயகி மகாலிங்கம் குடும்பத்தவர்களின் நிதிப்பங்களிப்பில் திறன் வகுப்பறை ஒன்று கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (19/8) திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி கவின்ஜா நவஜீவா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரிகளின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளரும் IMHOUSA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளருமாகிய சு.கிருஷ்ணகுமார், கௌரவ விருந்தினராக கோப்பாய் மற்றும் நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் என்.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்விழாவில் இரட்ணம் பவுண்டேசன்UK ஸ்தாபகர் கலாநிதி இரட்ணம் நித்தியானந்தன் ஆற்றிவரும் மனித நேய அர்ப்பணிப்பான சேவைகளுக்காக நன்றி தெரிவிக்கப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்டிருந்த ஆரம்பக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திறன் பலகையை கையாள்வது தொடர்பான வழிகாட்டல்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டது.இறுதியில் தேசிய மட்டத்தில் பரிசில்கள் பெற்ற இப்பாடசாலையின் இருமாணவர்களும் விருந்தினர்களால் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தது.





கெரவலப்பிட்டியில்

# மூங்கில் காட்டுப் பகுதியில் தீப்பரவல்

கெரவலப்பிட்டி பகுதியிலுள்ள சதுப்பு நிலத்தை அண்டிய மூங்கில் காட்டுப் பகுதியில் நேற்று திடீரென தீப்பரவல் ஏற்பட்டது.

தீயைக் கட்டுப்படுத்தும் பணிகளில், விமானப்படையின் பெல் 412 ரக ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப் பட்டதாக, விமானப்படையின் பேச்சாளர் கப்டன் ரொஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமானப்படை முகாமுக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்றே, இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தீப்பரவல் சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.50 | 256.43 |
| கனடியன் டொலர் | 272.16 | 285.15 |
| யூரோ | 353.45 | 368.56 |
| ஜப்பான் யென் | 2.5937 | 2.6993 |
| சிங்கப்பூர் டொலர் | 254.19 | 265.21 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 418.55 | 435.71 |
| சுவிஸ் பிராங்க் | 368.26 | 385.71 |
| அமெரிக்க டொலர் | 357.40 | 368.71 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.52 | கட்டார் ரியால் | 98.22 |
| குவைத் டினார் | 1,173.60 | சவூதி ரியால் | 96.12 |
| ஓமான் ரியால் | 937.65 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.28 |

06

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆவணி மாதம் 11ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து

ஒரு செயலுக்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பவர் தேர் கடலிலே ஓடாது, கப்பல் நிலத்தில் போகாது என்பதையாவது தெரிந்தவராக இருக்க வேண்டும்.

## பெருந்தோட்ட மக்களின் போஷாக்கு குறைபாடு தீர்க்கப்பட வேண்டும்!

இந்நாட்டின் பெருந்தோட்ட சமூகம் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்படும் பிரிவாக இருக்கப் போகிறது என்பதால் இச்சமூகத்தின்பால் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம்.

இச் சமூகத்தை 1970ம் காலப்பகுதியோடு ஒப்பிடுவதற்கில்லை. அன்றைய நிலைகளில் இருந்து இச்சமூகம் மீண்டு பெருமளவில் முன்னேற்றம் கண்டிருப்பது உண்மையானாலும் ஏனைய சமூகங்களோடும் நாட்டின் அபிவிருத்தி நிலைமைகளோடும் ஒப்பிடும்போது இச்சமூகம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது என்பது வெளிப்படையானது. எனவே நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மட்டத்தில் ஏற்படக் கூடிய சாதகமற்ற தன்மைகள் அல்லது எதிர்விளைவுகள் இச்சமூகத்தை அதிக அளவில் பாதிக்கவே செய்யும்.

இச்சமூகத்தில்தான் பாடசாலை இடைவிலகல் இன்றைக்கும் அதிகமாகக் காணப்படுகிறது. தோட்டப் பாடசாலைகளில் பௌதீக வளங்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறையும் கற்பித்தலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வருகிறது. பெருந்தோட்ட குடிகளின் வருமான நிலை மோசமாக இருப்பதால் தமது பிள்ளைகளின் மேலதிகக் கல்விச் செலவுகளை அக் குடும்பங்களால் சமாளிக்கக் கூடியதாக இல்லை. மேலும் பெரும்பாலான மாணவ மாணவியர் காலை உணவாக ஒரு தேநீரை அருந்திய பின்னரேயே பாடசாலை செல்கின்றனர். சாப்பிட காலையில் எதுவும் தயாராக இருக்க மாட்டாது என்பது ஒரு காரணமாக இருந்தாலும் கரடு முரடான அல்லது நெடிய தூரத்தைக் கடந்து செல்ல வேண்டிய அவசரத்தில் அவர்களில் பலர் காலை உணவை தவிர்த்து விடுவதாவும் தெரிகிறது.

ஒரு நாளைக்கான உணவில் காலை உணவு முக்கியமானது என்பதும் சுமார் பத்து மணித்தியால இடைவேளையின் பின்னர் சாப்பிடும் உணவாக இருப்பதால் காலை உணவு தவிர்க்கப்படக் கூடாது என்பதும் உணவு தொடர்பான நிபுணர்களின் கருத்தாகும். இரவு உணவின் பின்னர் மறுநாள் பகல் உணவுவரை மாணவர்கள் தொடர்ச்சியாக உணவருந்தாமல் வாடும் போது அது சோர்வையும், பாடங்களில் நாட்டமின்மையையும், கிரகித்தலில் குறைபாட்டையும் ஏற்படுத்துகிறது.

காலை ஆகாரம் தொடர்பான இத்தகவல்கள் பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டிருந்தாலும் கூட இன்றைக்கும் காலை உணவை உட்கொள்ளாமல் தான் பெருந்தொகையான மாணவ மாணவியர் பாடசாலை செல்கின்றனர். குறைந்த விலையில் கிடைத்து வந்த புரத உணவான முட்டைகளின் விலை தற்போது 50 முதல் அறுபது ரூபா வரை உயர்ந்துள்ளது. விலையை ஐம்பது ரூபாவாக நிர்ணயிக்க இணக்கம் காணப்பட்டிருந்தாலும் சாதாரண மனிதருக்கு முட்டை விலை கைக்கெட்டும் தூரத்தில் இல்லை. ஆனால் முட்டை போஷாக்கான உணவு என்பதோடு அவசர உணவு தயாரித்தலுக்கு உகந்தது. பெருந்தோட்டங்களில் கோழி வளர்ப்பு பலராலும் மேற்கொள்ளப்படும் ஒன்றாக இருந்தாலும் பெரும்பாலும் அவை விற்பனை செய்யப்பட்டு விடுவதால் அக்குடும்பங்களின் தேவைக்கு, குறிப்பாக சிறுவர் சிறுமியருக்கு அவை போய்ச் சேர்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலை கற்கையில் சரிவு, போஷாக்கில் குறைபாடு என்பனவற்றோடு தற்போது மண்ணெண்ணெய் விலையும் அச்சமூகத்தின் வாழ்வில் இடியாக இறங்கியுள்ளது. 1974 இல் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது அச்சமயத்தில் நாடற்றவர்களாக அறியப்பட்டிருந்த இச்சமூகம் இன்னொரு பாரிய பிரச்சினையையும் சந்திக்க வேண்டியிருந்தது. அன்றைய ஸ்ரீமா அரசு, பெருந்தோட்டங்களை நிர்வகித்து வந்த வெளிநாட்டு நிறுவனங்களை வெளியேற்றி தோட்டக் காணிகளை சுவீகரித்தது. சில தோட்டங்கள் துண்டு துண்டாக்கப்பட்டு சிங்கள கிராமவாசிகளிடம் கையளிக்கப்பட்டன. இதனால் கணிசமான தொழிலாளர்கள் தொழிலையும் இருப்பிடங்களையும இழந்து நடுத்தெருவுக்கு வரவேண்டியிருந்தது. ஒரு பக்கம் போதிய உணவை பெற்றுக் கொள்ள முடியாத நிலை. மறுபுறம் தொழில் இழப்பால் அல்லது தோட்டங்கள் கைமாறியதால் ஏற்பட்ட குழப்பத்தில் உணவுகளை வாங்கும் சக்தியை இவர்கள் இழந்தனர். பெருந்தோட்ட வரலாற்றில் இது ஒரு பெரும் பொருளாதார மற்றும் வாழ்வியல் நெருக்கடி நிலையாகவே இன்றளவும் பார்க்கப்படுகிறது.

இன்று பெருந்தோட்ட சமூகம் மிகப்பெரிய போஷாக்கு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. யுனிசெப் நிறுவனம் இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்திருப்பதோடு உலக நாடுகளிடம் இலங்கைக்கு உதவும்படி கோரிக்கையும் விடுத்துள்ளது. எவை எல்லாம் நடக்கவுள்ளதோ அவற்றை முன்கூட்டியே உணர்ந்து அவற்றை எதிர்கொள்வதே புத்திசாலித்தனமானது. ஆனால் பெருந்தோட்ட சமூகம் எதிர்கொள்ளவுள்ள கல்வி, போஷாக்கு, ஆரோக்கிய பிரச்சினைகள் பற்றி எந்தவொரு மலையக அரசியல், தொழிற்சங்க தலைமைகளோ அல்லது பிரதான சமூக அமைப்புகளோ குரல் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஊடகங்கள் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதியினால் முடியுமென்ற நம்பிக்கை எமக்கு உள்ளது

### ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன பேட்டி



ஜனநாயகத்துக்கு எதிராக நாட்டில் பாஸிசத்தை விதைப்பவர்கள் புனர் வாழ்வு செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். எமக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**கே: தற்போது உங்கள் கட்சியின் தலைமை நாட்டின் தலைமையாக மாறியுள்ளது. அரசியலமைப்புக்கு அமைய இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டாலும், பொதுமக்களின் பிரதிநிதித்துவம் இல்லை என சில தரப்பினர் கூறுகின்றார்கள் அல்லவா?**

*பதில்: அரசியலமைப்பில் 37/1, 37/2 மற்றும் 40 சரத்துகள் ஏன் எழுதப்பட்டுள்ளன?அரசியலமைப்பு பற்றி அறியாத, ஜனநாயகம் பற்றி எதுவும் புரிந்து கொள்ளாதவர்களே இவ்வாறு கூறுகின்றார்கள். வரலாற்றிலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்கள் காணப்படுகின்றன.*

*1993 மே முதலாம் திகதி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச மரணமடைந்தார். அவ்வேளையிலும் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவ்வேளையில் எதிர்க்கட்சித் தலைவியாக சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் பதவி வகித்தார். அவர் அவ்வேளையில் பொறுப்புடன் தனது பதவியை வகித்தார்.*

> **ஜனநாயகத்துக்கு எதிராக நாட்டில் பாஸிசத்தை விதைப்பவர்கள் புனர்வாழ்வு செய்யப்பட வேண்டும்**

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்பதவிக்கு வருவதற்காக திரையின் பின்னால் இருந்த முக்கியமானவர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன என்று கூறப்படுவதை ஏற்றுக் கொள்வீர்களா?**

*பதில்: நான் தனியாக அதனை செய்தேன் எனக் கூற முடியாது. நாம் ஒரு அணியாக இலக்கை நோக்கி பயணித்தோம். 2019 ஆம் ஆண்டு எமது ஆட்சியின் போது நாம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன் காரணமாக நம் நாட்டின் நிர்வாகம் பாதிக்கப்படும் என்பதை நிச்சயமாக அறிந்திருந்தோம்.அது பற்றிய விசேட அனுபவம் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தது. அதனால்தான் அவர் இந்த நாடு முகம் கொடுத்துவரும் நிலைமை பற்றி அடிக்கடி தனது கருத்துக்களை தெரிவித்து வந்தார். நாம் பாராளுமன்றத்துக்கு 50 வருட அனுபவம் உள்ள தலைவராகவே ரணில் விக்கிரமசிங்கவை அனுப்பியுள்ளோம்.*

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ள ஒரு நாட்டின் ஜனாதிபதி பதவியையே ஏற்றுள்ளார். அவரால் அந்த இடத்தில் இருந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியுமா?**

*பதில்: உண்மையில் 2022 ஏப்ரல் 8 ஆம் திகதி இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக கூறப்பட்டது. அரசியலமைப்பின் 148,149, 150 மற்றும் 151 என்னும் சரத்து மீறல் இடம்பெற்றுள்ளது. நாடொன்றை வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிப்பதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஜனாதிபதியால் ஆறு ஏழு மாதங்களுக்குள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். தற்போது இரண்டு வருடங்களாக கிடைக்காத உரம் வந்துள்ளது. எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. கியூ வரிசையை குறைத்து நாட்டை பழைய நிலைமைக்கு கொண்டு வர வேண்டும். அதனை ஜனாதிபதியால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.*

**கே: நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றால் அனைத்து அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் கூடிய சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என கூறப்படும் யோசனை குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

*பதில்: நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது மாற்றம் அடையாத தேசிய கொள்கையை அரசியலமைப்பில் இணைத்து செயல்பட வேண்டும். அவ்வாறான கொள்கைகளை அரசியல் அமைப்பில் இணைப்பதற்கு நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்து ஒற்றுமையா க இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர விரும்புகின்றார். அதற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பினையும் விடுத்துள்ளார்.*

**கே: இணைந்து செயலாற்றக் கூடிய முறை ஒன்று தற்போது உள்ள அமைச்சரவையில் உருவாகியுள்ளதா?**

*பதில்: இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு நாம் பயணித்துள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு ஆசனமே இருந்தது. நிறைவேற்று முறை மூலம் தற்போது இன்னொன்றும் கிடைத்துள்ளது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இரண்டு ஆசனங்களே உள்ளன. தற்போது நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும் என்ற விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் யோசனை முன்வைக்க முடியும். அதனையே ஜனாதிபதியும் எதிர்பார்க்கின்றார். அதன் மூலமே நாட்டில் நிலையான தன்மையை ஏற்படுத்தி முன்னோக்கி பயணிக்கலாம்.*

**கே: ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றச்சாட்டு உள்ளதல்லவா?**

> **ஆறேழு மாதங்களில் முன்னேற்றமான மாற்றங்களை எதிர்பார்க்க முடியும்**

*பதில்: காலிமுகத்திடல் போராட்டம் மிகவும் அழகான போராட்டம். அந்தப் போராட்டத்தின் நோக்கம் ஒரு பிரிவினருடையதல்ல. அதற்கு பல அரசியல் கட்சிகள்,வர்த்தகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அனைத்து சக்திகளும் ஒரே நோக்கத்திற்காக ஒன்றிணைந்ததை காண முடிந்தது. அந்த நோக்கத்திற்காக செயல்பட்ட மக்கள் பிரிவினருக்கு பல தலைமைகள் காணப்பட்டன. இறுதியில் தவறான இடத்திற்கு பயணித்தார்கள். இலங்கை சர்வதேசத்தின் பார்வைக்கு மோசமான நாடாகியது. ஒரு சிறு பிரிவினரே அதற்காக செயல்பட்டார்கள். ஜனாதிபதி மாளிகை தனியார் சொத்தல்ல. இலங்கை மக்களின் அடையாளம். வீடியோ காட்சிகளை காண்பித்து இரகசிய இடங்களையும் உலகிற்கு பகிரங்கமாக்கினார்கள். அரசு தலைவர்கள் ஒரு நாட்டிற்கு விஜயம் செய்யும் போது தங்களுடைய தலைவர்களுக்கு பாதுகாப்பு உள்ளதா என ஆராய்வார்கள். ஆனால் இலங்கை உலகின் முன்னால் சிறுமைப்படுத்தப்பட்டது. நாம் மக்களின் நியாயமான கோரிக்கைகளை எதிர்ப்பவர்கள் அல்ல. அதன் பின்னால் மறைந்து நாட்டின் அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஜனநாயகத்துக்கு எதிராக பாஸிசவாதத்தை விதைப்பவர்களை புனர்வாழ்வு செய்ய வேண்டும்.*

> **ஜனாதிபதி மாளிகை தனியார் சொத்தல்ல. அது இலங்கை மக்களின் அடையாளம். வீடியோ காட்சிகளை காண்பித்து இரகசிய இடங்களையும் உலகிற்கு பகிரங்கமாக்கினார்கள். உலகின் முன்னால் இலங்கையை சிறுமைப்படுத்தி விட்டார்கள்**

**கே: ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் கட்சிகளை எதிர்காலத்தில் அரசுடன் இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கின்றீர்களா? அவற்றுடன் இணைந்து நடவடிக்கையில் மேற்கொள்ள உங்கள் திட்டங்கள் எவை?**

*பதில்: அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். நடத்தியும் உள்ளோம். அனைவரும் இணைத்து செயலாற்ற விரும்புகின்றோம். இந்நாட்டின் தற்போதைய பிரச்சினையை தீர்த்து நாட்டை அபிவிருத்தி செய்ய நாம் அனைவரும் இணைய வேண்டியுள்ளது.*

**கே: போராட்டக்காரர்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியதாலும் மேலும் பல குற்றச்சாட்டுகளின் கீழ் எதிர்காலத்தில் அவர்களை கைது செய்வதற்கு உள்ள திட்டங்கள் காரணமாக சர்வதேச ரீதியாக அரசாங்கத்திற்கு கிடைக்கவுள்ள உதவிகள் கிடைக்காமல் போகும் என எதிர்வு கூறப்படுகின்றது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

*பதில் : ஜனநாயக நாடுகள் ஜனநாயக கட்டமைப்புக்குள்ளேயே செயல்பட வேண்டும்.ஜனநாயகத்தை மதிக்கும் சர்வதேச நாடுகளும் ஜனநாயகத்துக்கு பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் செயற்பட்ட விதத்திலேயே இந்நாடும் செயல்படுகின்றது. அதனால் அது கருத்துக்களை கூறுவதற்கு உள்ள உரிமைக்கு அச்சுறுத்தலுக்கு ஆளாகாது. ஆனால் கருத்துக்களை கூறும் உரிமைக்குப் பின்னால் மறைந்து நாட்டில் உள்ள ஜனநாயகத்தின் அடிப்படை பண்புகளை தாக்குவார்களானால் அவ்விடத்தில் ஜனநாயகத்திற்காக அரசாங்கம் செயல்பட வேண்டியுள்ளது. நாட்டின் பாதுகாப்புக்காக நடவடிக்கையில் ஈடுபட வேண்டியது முப்படைகளினதும் பொலிஸாரினதும் கடமை என்று நான் எண்ணுகிறேன்.*

**கே: ஆரம்ப காலம் தொட்டு இந்நாட்டின் பிரபல அரசியல் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி கடந்த காலங்களில் பின்னடைவை சந்தித்தது. அக்கட்சியை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வர மக்களை இணைப்பதற்கான திட்டம் உள்ளதா?**

*பதில்: ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் நாட்டின் அரசியல் நடவடிக்கை மற்றும் நிலைமை வேறானது. அதனால் அனைத்து அரசியல் சக்திகளும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு இந்நாட்டில் காணப்படுகின்ற பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி எதிர்கால நடவடிக்கைகளை இலங்கை பூராவும் செயல்படுத்த வேண்டியுள்ளது. அதனை விரைவுபடுத்தவும் வேண்டும்.*

சுபத்ரா தேசப்பிரிய...
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# இலங்கை மாணவர் கல்வி நிதியம்-CSEF (1988-2022) மெல்பனில் இன்று வருடாந்த பொதுக்கூட்டம்




அவுஸ்திரேலியாவில் நீண்டகாலமாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 27 ஆம் திகதி (27082022) சனிக்கிழமை மாலை 400 மணிக்கு மெல்பனில், வேர்மன் தெற்கு சமூக நிலையத்தில் (Vermont South Learning Centre 1 Karobran Drive, Vermont South VIC 3133.) நிதியத்தின் தலைவர் லெ. முருகபூபதி தலைமையில் நடைபெறுகின்றது.

இலங்கையில் முன்னர் நீடித்த போரில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும், வறுமைக்கோட்டின் கீழிருக்கும் மாணவர்களுக்கும் கல்வி சார்ந்த தேவைகளுக்காக உதவி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் கடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் குறிப்புகளையும் ஆண்டறிக்கையையும் நிதியத்தின் செயலாளர் திருமதி விதுஷினி அருளானந்தம் சமர்ப்பிப்பார். நிதிச்செயலாளர் செல்வி திவானா கிருஷ்ணமூர்த்தி நிதியறிக்கையை சமர்ப்பிப்பார்.

துணை நிதிச்செயலாளர் விமல் அரவிந்தன், நிதிய உறுப்பினர் ரவி–ரவீந்திரன் ஆகியோர், நிதியத்தின் ஊடாக பயனடையும் மாணவர்களின் நிதிக் கொடுப்பனவு மற்றும் அவை சார்ந்த நிருவாக நடைமுறைகள் குறித்த விளக்கங்களை உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பர்.

கல்வி நிதியத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை நடைபெறவிருக்கும் ஆண்டுப்பொதுக்கூட்டத்திற்கு வருகை தருமாறு நிதியத்தின் பரிபாலன சபை அன்புடன் அழைக்கின்றது.

மாணவர்களுக்கு உதவ விரும்பும் அன்பர்கள் பின்வரும் இணைப்பில் தங்கள் விபரங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

***https://csefund.org.au/membership/#account/join***

தகவல்:
லெ.முருகபூபதி...
தலைவர், இலங்கை
மாணவர் கல்வி நிதியம்

# திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வதற்கு மீண்டும் முயற்சிகள் இடம்பெறுவதாக தகவல்கள்!



## மக்கள் வாழும் கிராமங்கள் பாதிக்கப்படுமென அச்சம்!

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் வாழும் பெரிய நிலப்பரப்புடன் கூடிய திருக்கோவில் கடலோரப் பிரதேசம் இல்மனைட் அகழ்வால் மீண்டும் ஆபத்தில் சிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வுக்காக கடந்த ஏழு வருடங்களாக பாரிய நிறுவனமொன்று முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. இதன் போது அப்பகுதி மக்கள் பாரிய எதிர்ப்பு வெளியிட்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதன் காரணமாக அம்முயற்சி நிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் இன்று மீண்டும் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்படவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரம்பத்தில் தம்பட்டை தொடக்கம் உமிரி வரை இந்த அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக இருந்தது. சனச்செறிவு கூடிய பிரதேசங்களான தம்பட்டை, விநாயகபுரம் போன்ற பகுதிகளில் இல்மனைட் அகழ்வு மேற்கொள்ள முடியாது என்று கூறப்பட்ட காரணத்தினால், தற்போது விநாயகபுரம் கோரைக்களப்பு தொடக்கம் உமிரி வரைக்குமான சுமார் 4 கிலோ மீட்டர் தூர கடலோர பகுதி இல்மனைட் அகழ்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

எனினும் அந்தப் பிரதேச மக்கள் தங்களது எதிர்ப்புகளை தெரிவித்த வண்ணமே இருக்கின்றார்கள்.

அவுஸ்திரேலியா நிதியுதவியுடன் பாரிய நிறுவனமே இதனை பாரிய முதலீட்டுடன் செய்ய இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் அலுவலகம் இங்குள்ள கிராமம் ஒன்றில் இயங்கி வருவதாகவும், அந்நிறுவனம் மக்களுக்கு உதவி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

திருக்கோவில் பிரதேச சபையானது தவிசாளர். இ.வி.கமலராஜன் தலைமையில் கூடிய போது இல்மனைட் அகழ்வு இடம்பெறக்கூடாது என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது மாத்திரமல்ல இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்டிருந்தது.

கிழக்குப் பல்கலைக்கழகம் அல்லது தென்கிழக்கு பல்கலைக்கழகம் அல்லது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் சேர்ந்த புவியியல் ஆய்வாளர்கள் ஆய்வை மேற்கொண்டு ஒரு சுதந்திரமான அறிக்கையை தயாரிக்க வேண்டும். அதன் பின்பே இந்த அகழ்வு தொடர்பாக தீர்மானம் எடுக்கலாம் என்பதே பொதுவான அபிப்பிராயம் ஆகும்.

இந்த அகழ்வு இடம்பெற்றால் கோரைக்களப்பு, விநாயகபுரம், பாலக்குடா, உமிரி, சங்கமன்கிராமம், தாண்டியடி, கோமாரி, மணல்சேனை, செல்வபுரம் ஆகிய கிராமங்களில் 5000 குடும்பங்கள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கூறப்படுகின்றது.

கடல் ஆமை முட்டையிடுகின்ற பிரதேசமும் இதுதான். இப்பிரதேசத்தில் கடல் ஆமை முட்டைகள் கூடுதலாக இடப்படுகிறது. மேலும் இந்தப் பிரதேசத்தில் மரக்கறிச் செய்கை, களப்பு நன்னீர் மீன்பிடி போன்றவை சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

இல்மனைட் அகழ வேண்டுமானால் உகந்தைக்கு அப்பால் கிரிந்த, அம்மாந்தோட்டை வரையிலான சுமார் 300 கிலோ மீற்றர் தூரமான கடலோரப் பிரதேசம் பொருத்தமானது. ஏனெனில் ஜனசந்தடியற்ற காட்டுப்பகுதி அது. அதிலே இந்த இல்மனைட் அகழ்வை எவ்வித பாதிப்பும் இன்றி மேற்கொள்ளலாம் என்பது மக்களின் அபிப்பிராயமாகும்.



**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# இங்கிலாந்தில் இருந்து இலங்கையில் சமய சமூக பணியாற்றும் விழிசிட்டி டொக்டர் சீ. நவரத்தினம்

அன்றைய காலத்தில் ஒருவரை இனம் காண்பதற்கு அவரது பெயருக்கு முன்னே அவர் பிறந்த கிராமத்தின் பெயரையும் இணைத்து விடுவார்கள். கிராமத்தை வைத்துத்தான் ஒருவரை இனம் காண்பார்கள். ஆனால் அதில் ஒரு சிலரால் கிராமம் இனங்காணப்படுகிறது என்பதும் உண்மை. அவர்களால் அக்கிராமம் பேசப்படுகிறது. பெருமையுறுகிறது. நினைவில் நிற்கிறது.

விழிசிட்டி என்பது ஒரு சிறிய கிராமம். விழிசிட்டியின் மைந்தர்கள் சிலர் அதன் பெயரைத் துலங்க வைத்துள்ளனர். அவர்களில் முதன்மையில் நிற்பவர் வைத்திய கலாநிதி சீ.நவரத்தினம் அவர்கள். எனக்கு அவருடன் ஏறக்குறைய 55 வருட பரிச்சயம். எனவே அவரது செயல் தன்மையை சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் கூற முடியும்.

அக்குடும்பம் சமய உணர்வுடன் சமூக உணர்வும் நிறைந்த குடும்பம். எனவே கிராமத்தினது உயர்ச்சியிலும், எழுச்சியிலும், இறை உணர்விலும் அதிக அக்கறை கொண்ட குடும்ப சூழலில் வளர்க்கப்பட்டமையால் உள்ளூர் ஆலயமாகிய வைரவர் கோவில் வீதியைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வைப்பதிலும், வாராவாரம் வெள்ளி தோறும் அங்கே பஜனை பண்ணுவதில் இளம் பராயம் தொட்டு நவரத்தினம் முக்கிய பங்கேற்றார்.

மருத்துவக் கல்லூரி சென்று மருத்துவராகி இலங்கையில் சேவையாற்றிய காலத்திலும் பின்னர் இங்கிலாந்தில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற போதும் இந்த கிராமத்தையும் வைரவ கோவிலையும் அவர் மறந்தார் இல்லை. அந்த ஆலயத்துக்குத் தொடர்ந்து பண உதவி செய்து வந்துள்ளதுடன் ஆலயத்தின் பிரதம குருவினது மாதாந்த சம்பளத்தை அவர் செலுத்தி வந்துள்ளார். மருத்துவக் கல்லூரியில் கற்கின்ற வேளையில் விடுமுறைக் காலங்களில் தனது ஊருக்கு வர தவறியதே இல்லை.

மகாஜனாக் கல்லூரியில் வெகுவிமரிசையாக நடைபெறும் நிறுவியவர் தின பரிசளிப்பு விழாவின் போது நவரத்தினம் அந்தந்த பகுதிக்குரிய அத்தனை பரிசுகளையும் தனதாக்கிக் கொள்வார்.

1951ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவின் போது நடந்த ஒரு நிகழ்ச்சி, விழாவிற்கு சமூகம் கொடுத்த அத்தனை பேர்களுடைய கண்களுக்கும் விருந்தாக அமைந்தது. சிறுவன் நவரத்தினத்தின் பெயரை ஒவ்வொரு முறையும் அழைக்கும் போது அவன் தனது பிஞ்சுக் கால்களால் நடந்து மேடையேறிப் பரிசுகளைப் பெற்று வருவதைக் கண்டு கொல்லாங்கலட்டியைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் மனம் பொறுக்காமல், 'குழந்தை எத்தனை தரம் நீ நடந்து மேடை ஏறுவாய? நான் இம்முறை உன்னை தூக்கிச் செல்வேன்' என அடம் பிடித்து அவரைத் தூக்கி மேடை நோக்கி சென்ற காட்சி இன்றும் பலர் நினைவில் நிற்கிறது.

மருத்துவரான பின்னர் தனது பயிற்சி இலங்கையில் அக்காலத்தில் பிரபலமாயிருந்த பேராசிரியர் மில்ரோய் போல் அவர்களின் கீழும் மகப்பேற்று வைத்தியத்தில் புகழ் மிக்க பேராசிரியர் பிறின்ஸ்



இராஜரத்தினத்தின் கீழும் பயிற்சி பெற்றார். பின்னர் யாழ் மருத்துவசாலையில் மூன்று ஆண்டுகள் (1965_1968) சேவையாற்றியது ஊர்வாசிகளுக்கோர் வரப்பிரசாதமாக அமைந்த காலம் எனலாம்.

யாழ்ப்பாணத்தில் பிரபல வைத்தியராக விளங்கிய தர்மலிங்கம் அவர்களின் மகள் தர்மாம்பாள் அவர்களை திருமணம் செய்தார். அதன் பின்னர் மேற்படிப்புக்காக 1968ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்ற அவர் தனது கடினமான உழைப்பின் காரணமாக தோற்றிய அத்தனை உயர் கல்வித் தகமை களிலும் சிறப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். தனது கல்வித் தகைமைக்கும் மனதிற்கும் உகந்த வேலை கிடைத்தமையால் இங்கிலாந்திலேயே தங்கிவிட்டார்.

இங்கிலாந்து வந்தடைந்து ஆறு வருடங்களிலேயே வாதவியல் துறை ஆலோசகராக நியமனம் பெற்றார். 36 வருட சேவையின் பின் ஓய்வு பெற்ற பின்னரும் கௌரவ ஆலோசகர் சேவையாற்றுகிறார்.

தமிழர்களின் உடற்கல்வி மற்றும் மருத்துவத் தேவைகள் பற்றிய அறிவு வளர்ச்சி ஊக்குவிக்கும் முகமாக 1979 ஆண்டிலே தமிழர் மருத்துவ நிறுவனம் ஒன்றினை அமைத்து அதன் இயக்குனர் சபையிலும் சேவையாற்றியுள்ளார்.

தனது பாடசாலையான மகாஜனாவிற்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் கல்லூரிக்கான பழைய மாணவர் சங்க கிளை ஒன்றினை நிறுவி அதன் தலைமையை 1987 முதல் 1991 வரை ஏற்று பல விடயங்களிலும் மகாஜனாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றுள்ளார் லண்டனில் நிறுவப்பட்ட மகாஜன நூற்றாண்டு விழா நிதியத்தின் காப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

அவரது நோக்கம் தனது கிராமத்தை மீளக்கட்டியெழுப்புவது. மீண்டும் அவரது பிறந்தகம் புதுமை பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற ஆசையில் ஏனைய இடங்களில் வசித்து வரும் ஊரவர்களைத் திரும்பவும் ஊருக்கு வந்துவிட வேண்டும் என வினயமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். ஊரில் உள்ள ஆலயங்கள் புனருத்தாரணம் செய்வதற்காக பணச் செலவை ஏற்க தயாராக இருப்பதுடன் மக்களுக்கு உதவக் கூடிய பல செயற்திட்டங்களும் உதவ முன் வந்துள்ளார். மொத்தத்தில் வைத்தியர் நவரத்தினம் என்றும் எப்பொழுதும் தன் கிராமத்தின் வளர்ச்சி பற்றிய கனவுகளுடன் வாழும் பெருமனிதர்.

வடக்கு, கிழக்கு மலையக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு பணியாற்றி வரும் விழிசிட்டி வைத்திய கலாநிதி சீ. நவரத்தினம் அவர்களின் 84 ஆவது பிறந்த தினம் அண்மையில் லண்டனில் கொண்டாடப்பட்டது. அவரைப் பற்றி தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் பொ. கனகசபாபதி எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி அவரை கௌரவிக்கும் முகமாக பிரசுரமாகிறது.



**அமரர் பொ.கனகசபாபதி...**
(தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி முன்னாள் அதிபர்)

# பொதுநலவாய விளையாட்டில் வெற்றியீட்டிய இராணுவ வீரர்களுக்கு இராணுவ தளபதி வாழ்த்து

அண்மையில் நடைபெற்ற 'பொது நலவாய விளையாட்டு 2022' இல் பரா பரிதிவட்டம் எறிதல் (F4244/6164) மற்றும் 55 கிலோ பளுதூக்குதல் பிரிவுகளில் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற இராணுவத்தின் சார்ஜென்ட் எச்.ஜி பாலித பண்டார மற்றும் கோப்ரல் வை.டி.ஐ குமார ஆகியோர் 24 ஆம் திகதி நண்பகல் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே அவர்களை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்தனர். இலங்கை இராணுவத்தின் சார்ஜென்ட் எச்.ஜி பாலித பண்டார, பரா பரிதிவட்டம் எறிதல் F4244/6164 பிரிவில் 44.20 மீ தூரத்தை பதிவு செய்து வெள்ளிப் பதக்கத்தையும், கோப்ரல் வை.டி.ஐ குமார 55 கிலோ பளு தூக்குதல் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றதுடன் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தி 100 மீற்றர் ஓட்டத்தில் பதவிநிலை சார்ஜென்ட் யுபுன் அபேகோன் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

அவ்வீரர்களின் சாதனைகளைப் பாராட்டிய தளபதி, அவர்களின் எதிர்கால பயிற்சி வாய்ப்புகளுக்கான ஊக்கத்தொகையாக முறையே சார்ஜென்ட் எச்.ஜி பாலித பண்டார மற்றும் கோப்ரல் வை.டி.ஐ குமார ஆகியோருக்கு ரூ. 375,000.00 மற்றும் ரூ. 500,000.00 பெறுமதியான பண காசோலைகளை வழங்கினார்.

**எம்.எஸ்.எம் நஜாத்...**



# சீனாவில் வரலாறு காணாத வரட்சி!

சீனாவில் பாதிக்கும் மேற்பட்ட இடங்களில் வரலாறு காணாத அளவுக்கு வரட்சி நிலவுவதாகவும், இதனால் 37 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. சீனாவில் தற்போது கடும் வெப்ப அலை வீசி வருகிறது. வெப்பநிலை உயர்வின் காரணமாக சீனாவின் பல இடங்களில் வரட்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதமாக சீனாவில் வெப்பநிலை அதிகரித்து வருவதால், முக்கிய நீர்நிலைகள் கூட தண்ணீர் இல்லாமல் வரண்டு போய் விட்டன. தென்மேற்கு பகுதியில் உள்ள ஷாங்காய் மாகாணத்தின் யாங்சே டெல்டா பகுதிகளில் 20 நாட்களுக்கும் மேலாக கடுமையான வரட்சி நிலவுகிறது. உலகின் மிகப்பெரிய நதிகளில் ஒன்றான யாங்கே நதியில் கூட தற்போது தண்ணீரின் அளவு மிகவும் குறைந்துள்ளது.

நாட்டின் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான இந்த நதியிலும் தண்ணீர் குறைந்துள்ளதால், அடுத்தடுத்த நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து சீனா அரசு தீவிர யோசனையில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக வறட்சியை சமாளிக்க செயற்கை மழை பெய்விக்கவும் அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

பருவ நிலை மாறுபாடே இத்தகைய வெப்ப நிலைக்கு காரணம் என்று குறைகூறும் சீன அதிகாரிகள், வறட்சியால் சீனாவின் பல பில்லியன்கள் மதிப்பில் இழப்பும் ஏற்படுவதாக கூறுகிறது. சீனாவின் தென்மேற்கு பிராந்தியமான சோங்கிங்கின் தென்மேற்கு பகுதியில் உள்ள 34 கவுண்டிகளில் உள்ள 66 ஆறுகள் தண்ணீர் இன்றி வரண்டு விட்டன. நடப்பு ஆண்டில் 60 சதவீதம் அளவுக்கு மழை பொய்த்ததே இந்த வரட்சிக்கு காரணம் என்று அங்குள்ள அரசு அதிகாரிகள் சொல்கிறார்கள். அதீத வெப்பத்தால் சோங்கிங் பிராந்தியத்தில் உள்ள மலைப்பகுதிகள் மற்றும் வனப்பகுதிகளில் சில இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டது.

இதுமட்டுமல்லாமல் இந்த மாகாணத்தில் அதீத வெப்பம் காரணமாக உயிரிழப்பு சம்பவங்களும் அதிகரித்துள்ளன. ஒரு பக்கம் பலத்த மழை பெய்து வரும் நிலையில் மற்றொரு புறம் தாங்க முடியாத வெப்பம் பதிவாகி வருகிறது. கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனாவின் தெற்கு பகுதியில் வெப்பம் வாட்டி வதைத்து வருகிறது. மிகவும் குளிர்ச்சி நிறைந்த பகுதியாக அறியப்படும் திபெத்திய பீடபூமியிலும் இதுவரை இல்லாத அளவுக்கு வரட்சி சூழலை எதிர்கொண்டுள்ளது.

வரட்சியால் யாங்சே நதிப் படுகை மிகக் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளது. கடலோர மாகாணமான ஷாங்காயில் இருந்து சிச்சுவான் மாகாணம் வரை கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், சுமார் 370 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சோங்கிங் நகரம் மற்றும் சிச்சுவான், ஜியாங்சி மற்றும் ஜெஜியாங் மாகாணங்களில் 40 டிகிரி செல்சியசுக்கும் மேலே வெப்பம் நீடிக்கும் என்றும், இந்த நிலைமை செப்டம்பர் மாதம் வரை நீடிக்கும் என்றும் சீன வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# மனிதனுக்கு சிறப்பான தோற்றத்தைக் கொடுக்கும் சிகை அலங்காரம் நேர்த்தியாக பேணப்பட வேண்டும்

தலைமுடி ஒருவருக்கு சிறப்பான தோற்றத்தைக் கொடுப்பதால் அதனை அழகாகவும், ஆரோக்கியமாகவும் பேண வேண்டியது அவசியமாகும். இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொருந்தும். ஆனால், இன்று நாம் வாழும் சமூகத்தில் என்ன நடக்கின்றது? சிகை அலங்காரம் என்ற பெயரில், இளந்தலைமுறையினர் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். நாகரீகம் என்ற பெயரில் நகைப்புக்கிடமாக மாறி வருகின்றனர்.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளந்தலைமுறையினர்தான் இவ்வாறு சிகை அலங்காரம் என்ற பெயரில் தங்களது முக அழகை கெடுத்துக் கொள்கின்றனர் என்றால், பாடசாலை மாணவர்களில் அதிகமானவர்களின் நிலையும் இதுவாகத்தான் உள்ளது. இதுகுறித்து கவலை தெரிவிக்கும் பெற் றோர், இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்கின்றனர்.

பாடசாலை மாணவர்களையும், இளைஞர்களையும் நாகரீக சிகை அலங்காரம் என்ற பெயரில் அ சிங்கமாக்கும் பணியை யார் செய்கின்றார் என்ற கேள்வியை நாங்கள் ஒவ்வொருவரும் முன்வைப்போமானால், நமது பிரதேசத்திலுள்ள சிகை அல ங்கார நிலையங்களே இக்கைங்கரியத்தை செய்வதை தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அதிகமான சிகை அலங்கார நிலையங்களின் தற்கால நிலை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. சிகை அலங்கார நிலையங்களை நாடும் இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சிகை அலங்காரம் என்ற பெயரில், சிகை சிதைக்கப்படும் பணி அரங்கேற்றப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறி ப்பாக ஒழுக்கம், கட்டுக்கோப்புகளுடன் வாழும் பாடசாலை மாணவர்களுக்கான சிகை அலங்காரம் அண்மைக் காலத்தில் திருப்திகரமானதாக இடம்பெறவில்லை. இதுகுறித்து குறித்த சில பாடசாலை நிர்வாகங்களும் அதிருப்தி தெரிவித்து வருகின்றன. அது மாத்திரமின்றி இங்குள்ள முன்னணிப் பாடசாலைகள் மாணவர்களின் சிகை அலங்காரம் தொடர்பில் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அது தொடர்பில் சிகை அலங்கார நிலையங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.



முன்னைய காலங்களில் பாடசாலைகளிலுள்ள ஒழுக்கக் குழுக்கள் மாணவர் நலனில் அதீத அக்கறை கொண்டு தொழிற்பட்டனர். மாணவர்களின் நடை, உடை, பாவனை உள்ளிட்ட இன்னோரன்ன ஒழுக்க விடயங்களில் அவர்கள் கூர்மையான கவனம் செலுத்தி மாணவர்களை நல்வழிப்படுத்தினர். ஆனால், தற்காலத்தில் அவ்வாறானதொரு நிலையைக் காணமுடிவதில்லை. ஒழுக்கம் என்ற பெயரில் மாணவர்களை தண்டித்தால் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்ற அச்சத்தில் அல்லது தனது ரியூசனுக்கு ஆபத்து நேர்ந்து விடும் என்ற எதிர்பார்ப்பில் விலகிச் செல்பவர்கள் தற்காலத்தில் அதிகரித்துள்ளனர்.

இதைவிடவும் வேடிக்கை என்னவென்றால், கல்வி மற்றும் ஒழுக்க விழுமியங்களை மாணவர்களுக்கு வழங்கி வழிப்படுத்த வேண்டிய ஆசிரியர்களில் ஒரு சிலரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவர்களது சிகை அலங்காரம் தொடர்பிலும் பெற்றாரின் கவனம் திரும்பியுள்ளது.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளந்தலைமுறையினரின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. எதை எடுத்துக் கொண்டாலும் நவீனம், நாகரீகம் என்ற பெயரில் எதிர்காலத்தை சிதைத்துக் கொள்ளும் ஒரு நிலையையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இளந்தலைமுறையினரின் தற்கால போக்குக் குறித்து, சமூகத்திலுள்ள ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட கவனம் திரும்ப வேண்டும் என்பதில் ஐயமில்லை.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச சிகை அலங்கார நிலையங்களின் தற்கால பணிகள் தொடர்பில் அவசர கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சிகை அலங்கார நிலையங்களுக்கு உள்ளூராட்சி சபைகளே அனுமதி வழங்கும் பணியை முன்னெடுத்து வருகின்றன.

ஆகையால், சிலை அலங்கார நிலையங்களுக்கு வருடாந்த வியாபார அனுமதி வழங்கும், உள்ளூராட்சி சபைகள் இவ்விடயத்தில் அவசர கவனம் செலுத்தி, சிகை அலங்கார நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அவசியமான அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளை வழங்கி வழிநடாத்தும் பணியை நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரப்படுகின்றது.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

## இலங்கைக்கு உதவிக்கரம்... (03ஆம் பக்கத் தொடர்)

இந்தநிலையில் ஜப்பானிய தரப்புக்களின் இந்த முயற்சி தொடர்பில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது.

## இலங்கைக்கு பயணம்... (03ஆம் பக்கத் தொடர்)

இருக்கின்றார்கள்' என்று வாராந்தம் நடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள இந்திய வெளியுறவுத்துறைப் பேச்சாளர் அரிந்தம் பக்ஷி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி 'அதன்படி தற்போதைய சூழ்நிலையில் இந்தியர்களின் இலங்கைக்கான விஜயத்தைப் பொறுத்தமட்டில், இந்தியப்பிரஜைகள் இலங்கை உட்பட இந்தியாவுக்கு வெளியே எங்கிருந்தாலும் அப்போது அவர்களுடைய பாதுகாப்பும் நலனுமே எமது முதல் கவனத்திற்குரிய விடயமாகும்' என்று தெரிவித்துள்ள அவர், 'இந்தியாவுக்கு வெளியே இந்தியர்களுடன் தொடர்புபட்டதாக எந்தவொரு எதிர்பாராத சம்பவமும் நடைபெறுவதைத் தடுப்பதே எமது நோக்கமாக இருக்கின்றது.

எனவே இலங்கையிலுள்ள இந்தியர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதை நாம் ஊக்குவிக்கின்றோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இலங்கைக்கு அத்தியாவசிய பயணங்களை மேற்கொள்வதற்கு முன்பாக நாணயமாற்று இயலுமை மற்றும் எரிபொருள் கிடைப்பனவு உள்ளிட்ட முக்கிய காரணிகள் தொடர்பில் இந்தியர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம் என்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பக்ஷி வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 300 ஆட்டோக்களை மின்மயமாக்க...

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பான சட்டப் பின்னணியை தயாரிப்பதற்கான முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளும் விசேட மாநாடு எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இத்திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் நல்லிணக்க..

அவரது முதலாவது யாழ் மாவட்ட விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார்.

## உணவு உற்பத்திக்கு முன்னுரிமை...

வியாழக்கிழமை நடைபெற்ற மாகாண மாநாட்டில் பிரதமர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வெற்று நிலங்களை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் விடயங்களை ஒருபோதும் செயல்படுத்தக்கூடாது என்றும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பனவின் உதவிகள் கிடைக்கவும் இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கும் கிராம மட்டத்திலிருந்து திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பிரதமர் பிரதமர் தினேஷ் குணவர்தன இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

## கொடுப்பனவுகள் அடுத்த வாரம் முதல்...

செலுத்திய பின்னர், வழமை போன்று மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கொவிட் தடுப்பூசியை செலுத்த......

முதல் கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்கள் மேலும் மூன்று தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொள்ள வேண்டும். ஆனால் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதில் மக்கள் கூடுதல் நாட்டம் காட்டவில்லை என அவர் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சமய நிகழ்வுகள் நடைபெற்று வருவதால் கொவிட் பரவல் அதிகரிக்கும் சாத்தியங்கள் காணப்படுகிறது. இலங்கை மக்கள் பொதுவாக கொவிட் பெருந்தொற்று தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தாதை தற்போது அவதானிக்க முடிவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாடளாவிய ரீதியில் TNA...

இந்த கையெழுத்து வேட்டை பிரசாரத்திற்கு தமது ஆதரவை வழங்கி, மிகமோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

பயங்கரவாத் தடைச் சட்டம் மீண்டும் பயன்பாட்டிற்கு வந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், அச்சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீண்டகாலமாகப் பயங்கரவாத் தடைச் சட்டம் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் அந்த சட்டம் முஸ்லீம்களுக்கு எதிராகவும் தற்போது தெற்கில் மாணவர்களின் போராட்டத்தை அடக்குவதற்காக பயன்படுத்தப்படுவதாகவும் சுமந்திரன் எம்பி தெரிவித்தார்.

## தானிஷ் அலி உள்ளிட்ட...

இந்தச் சம்பவத்தில் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ள லஹிரு வீரசேகர மற்றும் மற்றுமொரு சந்தேகநபர் ஆகியோர் நேற்றுமுன்தினம் (26) நீதிமன்றத்தில் ஆஜராகி தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

## செப்டம்பர் மாதம் முதல் நீர்க்கட்டண...

எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் நீர் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இதற்கு முன்னர் அறிவித்திருந்தது. அதற்கமைய, வீடுகளின் நீர் கட்டணம் 70 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எனினும், குறைந்த வருமானம் பெறுவோரின் வீடுகள் மற்றும் அரச பாடசாலைகளில் குடிநீர் கட்டணம் உயர்த்தப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தொழிலாளர் மேம்பாட்டு...

கடிதத்தை தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு, அமைச்சர் மனுஷ நாணயக்கார இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பில் அவர் இட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'ரஞ்சன் ராமநாயக்க விடுதலையானதும் இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர் நலன்களை உலகளவில் மேம்படுத்துவதற்காக நல்லெண்ண தூதுவர் பதவியை அவருக்கு வழங்க நான் முன்வந்தேன். அவர் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

இது வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அவரது மறைமுக அறிவைப் பயன்படுத்துவதற்கான ஒரு தன்னார்வ நிலையாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## தங்கம் கடத்திய ஒன்பது...

ஹைதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையத்தில் சிறிது நேரம் தடுத்து வைக்கப்பட்டனர்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானமான யுஎல் 175 இல் வந்த ஒன்பது பயணிகளை சோதனை செய்த அதிகாரிகள் அவர்கள் மலவாயிலில் மறைத்து வைத்திருந்த தங்கங்களை கண்டறிந்தனர்.

இதன்போது மீட்கப்பட்ட மொத்த தங்கத்தின் எடை 7.304 கிலோ ஆகும். இதன்படி குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் சுமார் 450 தொடக்கம் 700 கிராம் தங்கத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

எனினும் தனித்தனியாக கடத்தப்பட்ட தங்கத்தின் மதிப்பு 50 இலட்சம் இந்திய ரூபாவை தாண்டாததால் விசாரணைக்கு ஒத்துழைக்க அறிவித்தல் அனுப்பிய பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

20 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்ட அவர்கள் கொழும்பைச் சேர்ந்தவர்களாவர்.

## மீண்டும் தேர்தலில் வென்று... (03ஆம் பக்கத் தொடர்)

வுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். ஊழல் மோசடிக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வேன் என்று தெரிவித்த அவர், நான் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவிடம் வாக்குறுதியொன்றை வழங்கியுள்ளேன். எவ்வாறிருப்பினும் ஊழல்வாதிகள் பிடிப்பதை சிலர் விரும்ப மாட்டார்கள் என்று எண்ணுகின்றேன் என்றார்.

## 3,000 மெற்றிக் தொன்... (03ஆம் பக்கத் தொடர்)

உறுதிப்பாட்டுக்கு ஒரு சான்றாக அமையும்" என தூதுவர் ஜுலி சங் தெரிவித்தார்.

இந்த உணவுத் தொகுதி, USDA McGovernDole சர்வதேச சிறார்களின் போசாக்கு மற்றும் கல்விக்கான உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இது பசியைக் குறைப்பதன் மூலம் கல்வியறிவு மற்றும் பாடசாலைக்கான வருகையை மேம்படுத்துவதற்காக உணவுப் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உடனடி அவசர உதவிகளை வழங்குவதை இலக்காகக் கொண்ட ஒரு ஐந்தாண்டு கால 26 மில்லியன் டொலர் செயற்திட்டமாகும். அதிக தேவையுடையவர்களை இந்த உணவு சென்றடைவதை உறுதிசெய்வதற்காக USDA மற்றும் அதன் பங்காளரான Save the Children என்பன இலங்கை அரசாங்கம் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றன.

2021ஜூன் மற்றும் 2022ஜனவரி ஆகிய காலப்பகுதிக்கிடையில் மாத்திரம், சந்தைக் கூட்டணிகளூடாக கல்வியறிவு மற்றும் கவனிக்கும் தன்மைக்கான தன்னாட்சியை மேம்படுத்துதல் (PALAM/A) எனும் செயற்திட்டம், கொவிட் 19 முடக்கநிலைகளின் போது 1,05,000 இற்கும் மேற்பட்ட சிறார்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மொத்தமாக 4,60,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு கடலை மற்றும் அலாஸ்காவைச் சேர்ந்த இளஞ்சிவப்பு சால்மன் வடிவில் புரதச் சத்துக்கான குறைநிரப்பிகளை இரண்டு முறை வழங்கியது.

ஓகஸ்ட் மாத நடுப்பகுதி வரை, PALAM/A செயற்திட்டம் அண்ணளவாக 50,000 பாடசாலை மாணவர்களுக்கு குறைநிரப்பு ஊட்டச்சத்துக்களை வழங்கியுள்ளது.

PALAM/A செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக, ஜூன் மாதத்தில் இருந்து மட்டும் வழங்கப்பட்ட கிட்டத்தட்ட 32 மில்லியன் டொலர் பெறுமதியான புதிய மனிதாபிமான மற்றும் தொழில்நுட்ப உதவிகள் உட்பட இலங்கைக்கு 179 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான புதிய உதவிகளை இந்த ஆண்டு அமெரிக்கா அறிவித்துள்ளது.

## எமது பாதுகாப்பு படையினருக்கு...

என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

வெற்றிகரமான இராணுவத்தை உருவாக்க ஒழுக்கம், பயிற்சி, அறிவு ஆகியன அவசியம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி , சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஏற்கனவே இந்த விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு ஜனாதிபதி வர்ணம் மற்றும் பல்கலைக்கழக வர்ணம் வழங்கும் நிகழ்வில் (25) கலந்துகொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு இராணுவ மரியாதை செலுத்தப்பட்டதுடன், ஜனாதிபதி வர்ணம் மற்றும் பல்கலைக்கழக கொடி வர்ணங்களுக்கு சர்வமத ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரை நிகழ்த்தியதுடன் ஜனாதிபதி வர்ணமும் பல்கலைக்கழக வர்ணமும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்கினார்.

பின்னர், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் விசேட உரை நிகழ்த்தியதுடன் பல்கலைக்கழக கொடி மற்றும் வர்ணங்களையும் வழங்கினார்.

சேர் ஜோன் கொத்தலாவல வளாகத்திலுள்ள நூதனசாலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்தில் குறிப்பொன்றையும் இட்டார்.

ஜனாதிபதிக்கு இங்கு விசேட நினைவு பரிசு ஒன்று கையளிக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க :

"இன்று சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் புகழைப் பெற்றுள்ளது. ஒரு பாதுகாப்பு பல்கலைக்கழகமாக உங்கள் திறமை வெளிக்காட்டப்பட்டுள்ளது. பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில் போராடிய பல அதிகாரிகள் இந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். எனவே இந்தப் பல்கலைக்கழகத்தை நாம் பாதுகாக்க வேண்டும். மேலும், திறமையான அதிகாரிகளை நமது இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

இந்தப் பல்கலைக்கழகம் மிகவும் முக்கியமானது. ஒரு இராணுவத்தை வழிநடத்த வேண்டுமானால், அது இராணுவம் தலைமையைப் பொறுத்துள்ளது. மேலும் அந்த இராணுவத்திற்கு ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் இல்லாமல் இராணுவம் முன்னேற முடியாது. ஒரு இராணுவம் ஒழுக்கத்துடன் மட்டுமே முன்னேற முடியும். மேலும் இராணுவத்தை ஒழுக்கத்தால் மட்டும் வழிநடத்த முடியாது. ஒழுக்கத்துடன் பயிற்சியும் தேவை. ஒரு இராணுவம் ஒழுக்கமும் பயிற்சியும் பெற்றாலும் வெற்றியடைய முடியாது. அந்த இராணுவத்திற்கு அறிவு இருக்க வேண்டும். இராணுவ அறிவு மற்றும் பிரதேச அறிவு இருக்க வேண்டும். அந்த அறிவுடன் வெற்றி கிடைக்கும். இங்குள்ள தலைவர்களுக்கு ஒழுக்கம், பயிற்சி மற்றும் அறிவு கொடுக்கப்படுகிறது. அங்கிருந்து, இராணுவம் அனைத்துப் பிரிவுகளுக்கும் தலைமைத்துவத்தை வழங்குகிறது. சிலர் இராணுவத் தளபதிகளாக மாறுகிறார்கள். மற்றவர்கள் இந்தப் பட்டத்துடன் பல்வேறு துறைகளில் சென்று சேவை செய்கிறார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு பெற்ற), பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் பல்கலைக்கழக உபவேந்தர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இலங்கைக்கான பயணஅறிவுறுத்தல்...

முன்னதாக இந்த நாடுகள், இலங்கைக்கான அத்தியாவசிய பயணங்களைத் தவிர மற்ற அனைவருக்கும் பயண ஆலோசனைகளை வழங்கியிருந்தன.

தற்போது மேற்கண்ட அனைத்து நாடுகளும் இலங்கைக்கான பயண அறிவுறுத்தலை நீக்கியுள்ளன. இதன் காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறை மேலும் வலுவடையுமென தெரிவிக்கப்படுகிறது. பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, நோர்வே மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் தங்கள் பிரஜைகள் இலங்கைக்கு செல்வதற்கான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதாக அறிவித்துள்ளமை தொடர்பில் மகிழ்ச்சி அடைகிறேன் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது ஒரு நேர்மறையான படியாகுமென்றும், குளிர்கால சுற்றுலாக் காலம் சிறப்பாக செயல்படுமென்று தான் நம்புவதாகவும் அமைச்சர் ஹரின் பர்னாண்டோ தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட மாட்டாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்ததையடுத்து முதலாவதாக சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் விதித்திருந்த பயண ஆலோசனைகளை இலகுபடுத்தியது.

நோர்வே, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, பிரிட்டன் அரசாங்கங்களின் இந்தத் தீர்மானத்தை இலங்கை உள்நாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர் சங்கம் (SLAITO) வெகுவாக பாராட்டியுள்ளது.

## மத்திய வங்கி ஒதுக்கும் நிதியிலேயே...

முகாமைத்துவத்துடன் விநியோகிப்பதற்கு வசதியாகவே கியூ. ஆர் முறைமை நடைமுறைப்படுத்தப்படுகிறதென தெரிவித்துள்ள அமைச்சர், இந்த முறைமை நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வாகாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை எரிபொருள் கொள்வனவுக்காக எந்தளவு நிதியை வழங்க முடியுமென மத்திய வங்கி எமக்கு தெரிவிக்குமானால், ஒதுக்கப்படும் நிதியை வைத்தே எந்தளவு எரிபொருள் தொகையை இறக்குமதி செய்யலாமென தீர்மானிக்க முடியும்.

இறக்குமதி செய்யும் எரிபொருளை முகாமைத்துவம் செய்து விநியோகிப்பதற்காகவே நாம் கியூ. ஆர் முறைமையை நடைமுறைப்படுத்துகின்றோம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இல்லத்திரனியல் ஊடகம் ஒன்றுக்கு அமைச்சர் வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாகவே எரிபொருள் நெருக்கடியும் ஏற்படுகிறது. போதியளவு நிதி இருக்குமானால் எரிபொருளை முகாமைத்துவப்படுத்துவதற்காக கியூ. ஆர் போன்ற முறைமை எமக்கு அவசியப்படாது.

எதிர்வரும் 12 மாதங்களுக்கு நாம் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த ஏப்ரல் பதினெட்டாம் திகதி நான் எரிசக்தி, மின்சக்திஅமைச்சர் பதவியை பொறுப்பேற்ற பின்னர் மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்புகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை மூலம் அதனை புரிந்து கொள்ள முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

## ரஞ்சன் விடுதலை...

தவறானதென்றும் அத்தகைய கூற்று காரணமாக பிரதம நீதியரசர் உள்ளிட்ட நீதித்துறையில் அனைவருக்கும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளமை தொடர்பில் தாம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை தம்மால் வெளியிடப்பட்ட கூற்றுக்கள் உண்மைக்கு புறம்பானவை என்றும் அதனை தாம் வாபஸ் பெற்றுக் கொள்வதாகவும் இனிமேல் அவ்வாறான கூற்றுக்களை வெளியிடப் போவதில்லை என்றும் அவர் சத்தியக்கடதாசியில் குறிப்பிட்டுள்ளார்.

சிறைத்தண்டனை அனுபவித்து வந்த அவர், தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குமாறு கடந்த 25 ஆம் திகதி சத்தியக் கடதாசி ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார். அதன்படி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர் நேற்று விடுதலையானார்.

அவரது ஜனாதிபதி பொது மன்னிப்புக்கான நடவடிக்கைகள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரை விடுதலை செய்வதற்கான ஆவணங்கள் நேற்று நீதியமைச்சினால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் செயலாளர் திருமதி வசந்தா பெரேரா அந்த ஆவணங்களை நேற்று சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளித்ததுடன் அந்த கையளிப்பு நிகழ்வில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் இணைந்து கொண்டார்.

ஆவணங்கள் கிடைத்ததை சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க நேற்று உறுதி செய்தார். அந்த ஆவணங்கள் உடனடியாகவே வெலிக்கடை சிறைச்சாலைக்கு கையளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வந்துள்ளதுடன் சிலர் சிறைச்சாலைக்குச் சென்று அவரை பார்வையிட்டும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல்கைதிகள் விடுதலை...

செய்து விட்டு, 12 முதல் 26 வருடங்கள் வரை சிறைகளிலுள்ள 46 அரசியல் கைதிகளின் விடுதலையை தவிர்த்துவிடக்கூடாது என தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சிக் காலத்தில் 217 அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்குறுதியளித்துவிட்டு, சந்தேகத்தின் பேரில் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதிய சாட்சியங்களற்ற 61 கைதிகளை பிணையிலும் 23 கைதிகளை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பியும் விடுதலை செய்ததாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, நீதிமன்றங்களினால் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியோ அல்லது மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்குட்பட்டிருந்த அரசியல் கைதியோ அரச தரப்பினருடன் நடைபெற்ற பேச்சுவார்தைகளின் போது இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா தெரிவித்துள்ளார். நல்லாட்சிக் காலத்தில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த கைதிகள் விடுதலை செய்யப்படும்போது தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸவே அப்போதைய நீதி அமைச்சராக செயற்பட்டவர் எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் வெள்ள...

எண்ணிக்கை 937 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 343 பேர் சிறார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 3 கோடி பேர் வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர் என அந்நாட்டின் தேசிய இடர் முகாமைத்துவ அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் அரசாங்கம் தேசிய அவசரநிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.

சிந்து மாகாணத்தில் இதுவரை 306 பேர் உயிரழந்துள்ளனர். பலோசிஸ்தானில் 234 பேரும் கைபர் பக்துன்கவா மாகாணத்தில் 185 பேரும் பஞ்சாப்பில் 165 பேரும் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியில் 37 பேர் உயிரிழந்தள்ளனர்.

பாகிஸ்தானில் ஓகஸ்ட் மாதம் 166.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அங்கு சராசரி மழைவீழ்ச்சி 48 மில்லிமீற்றர் ஆகும். இம்மாதம் மழைவீழ்ச்சி 241 சதவீதம் அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தேசிய இடர் முகாமைத்துவ அதிகார சபையில், 'போர் அறை' ஒன்றை பிரதமர் ஸ்தாபித்துள்ளார் என காலநிலை மாற்ற விவகார அமைச்சர் ஷெரி ரெஹ்மான் தெரிவித்துள்ளார்.

## கர்ப்பிணிப் பெண்...

கர்ப்பிணிப் பெண்ணான இவரை கணவன் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பொன்னாலை பாலத்துக்கருகில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற இவ் விபத்தில் காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியை சேர்ந்த ஜெயந்தன் தேவப்பிரியா என்ற 23 வயது பெண்ணே மரணித்துள்ளார்.

கர்ப்பிணிப்பெண்ணான இவரை மருத்துவ பரிசோதனைக்காக கணவன், காரைநகரிலிருந்து மூளாய் வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்றுள்ளார். யாழ்.பொன்னாலை பாலத்தின் அருகே மோட்டார் சைக்கிள் சென்ற போது பின்னால் அமர்ந்திருந்த பெண் தவறி விழுந்துள்ளார். உடனடியாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி பெண்ணை தூக்க முற்பட்டபோதும் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந் ததாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அவரது சடலம் உடல்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.




# எல்லை நிர்ணயம் பார்க்காமல் இறந்தவர்களின் இறுதிகிரியைகள் நடைபெற வேண்டும்

## ஜீவன் தொண்டமான் எம்.பி வேண்டுகோள்



பிரதேசங்களில் மரணங்கள் நிகழும்போது எல்லை நிர்ணயம் பார்க்காமல் மனிதாபிமான முறையில் சடலங்களை அடக்கம் செய்வதற்கோ அல்லது தகனம் செய்வதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை ஹற்றன் (LAA ADAMS) விருந்தகத்தில் இடம்பெற்ற போது அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

எல்லை மீள் நிர்ணய விவகாரத்தால் கடந்த வாரத்தில் சடலங்களை புதைப்பதற்கும்,தகனம் செய்வது தொடர்பில் ஹற்றன்,டிக்கோயா நகர சபை மற்றும் நோர்வூட் பிரதேச சபைக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பில் கடந்த (24) ஆம் திகதி காலை ஹற்றன், டிக்கோயா நகர சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள்,அதேபோன்று நோர்வூட் பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்களை அழைத்து இரு தரப்புகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றை ஜீவன் தொண்டமான் தலைமையில் நடத்தினார். இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான்,ஹற்றன் ரொத்தஸ் பிரதேசங்களில் மரணங்கள் நிகழும் போது அம்மரணங்களை ஹற்றன் நகர சபை ஊடாக அடக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேபோல் நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா தரவளை கொலணியில் மரணங்கள் நிகழும் போது அம்மரணங்களை நோர்வூட் பிரதேச சபை ஊடாக அடக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. எல்லை மீள் நிர்ணய விவகாரத்தால் இவ்விரு சபைகளுக்கிடையில் பிரதேசங்களில் மரணங்கள் நிகழும்போது எல்லை நிர்ணயம் பார்க்காமல் மனிதாபிமான முறையில் சடலங்களை அடக்கம் செய்யவோ அல்லது தகனம் செய்யவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஏ.பி சக்திவேல் முன்னால் மத்திய மாகாணசபை உறுப்பினர் பிலிப்குமார், நகரசபை பிரதேச சபைகளின் தலைவர்கள் உறுப்பினர்கள் மற்றும் ஹற்றன் நகர வர்த்தகர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# வழமைக்கு திரும்பியது மலையகத்திற்கான ரயில் சேவைகள்

**ஹற்றன் விசேட நிருபர்**



மலையகத்திற்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி புறப்பட்டு சென்ற ரயில் தடம் புரண்டமையால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மலையகத்திற்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹற்றன் புகையிரத நிலையத்திற்கும் ரொசல்லையிற்கும் இடையில் தடம்புரண்டதன் காரணமாக மலையகத்திற்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து ரயில் திணைக்களத்தின் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் இரவு தடம் புரண்ட ரயிலை மீண்டும் தண்டவாளத்தில் இருத்தி ரயில் பாதையினை சீர்செய்ததை தொடர்ந்து கொழும்பு, கண்டி, பதுளை ஆகிய பிரதான ரயில் சேவைகள் அனைத்தும் வழமைக்கு திரும்பியுள்ளன.

# வேலுசாமி ஆசைத்தம்பிக்கு தேசஅபிமானி விருது



வாழும் போதே வாழ்த்துவோம் எனும் கருப்பொருளில் காலி மாவட்டத்தை மையமாக கொண்டு இயங்கி வரும் ஸ்ரீ சிவ சக்தி ஆன்மீக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இந்து குருமார்கள், மற்றும் தேசஅபிமானிகளுக்கான விருதுகள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்டம் உடப்புஸ்ஸலாவை பகுதியைச் சேர்ந்த வேலுசாமி ஆசைத்தம்பி தேசஅபிமானி விருது பெற்று கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் புத்தசாசன மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க,

பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் இந்து சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன்,கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு விருதுகள் வழங்கி வைத்தனர்.

**ஆ.ரமேஸ்.**

# விண்வெளி வீரர் யூரிககாரியின் இலங்கை விஜயம் குறித்து ஆவணம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



விண்வெளிக்கு சென்ற ரஷ்யாவின் விண்வெளி வீரர் யூரிககாரின் 1961 ஆம் ஆண்டு இலங்கைக்கு (சிலோன்) விஜயம் மேற்கொண்ட போது இரத்தினபுரி மாவட்டத்திற்கும் அவர் விஜயம் செய்துள்ளார்.

இதன்போது இரத்தினபுரி இ/சீவலீ மத்திய மகா வித்தியாலயத்துக்கு வருகை தந்து அப்பாடசாலையின் வளவில் மரம் ஒன்றையும் நாட்டியுள்ளார்.

இவரது இவ்விடயம் குறித்த நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளதுடன் எதிர்கால சந்ததிக்கு இந்த வரலாற்று முக்கியத்துவமான தடயங்களை சேமித்து ஆவணப்படுத்தி வைப்பதற்காக குழு ஒன்று இயங்கி வருகிறது.

அத்துடன் அன்று யூரிககாரியை கண்ட ஒரு சிலரும் தமது அனுபவங்கள் உணர்வுகளை விஸ்தரித்து இவற்றை ஆவணப்படுத்தி வருகின்றனர்.

# இ/ ஜெய்லானி தேசிய பாடசாலை நுழைவாயில் முகப்பின் திறப்பு விழா

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை இ/ ஜெய்லானி தேசிய பாடசாலையின் பிரதான நுழைவாயில் முகப்பின் திறப்பு விழா வைபவம் நேற்றுமுன்தினம் வெகு விமரிசையாக வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இப்பாடசாலையின் நீண்ட கால குறைபாடாக பிரதான நுழைவாயில் காணப்பட்டது.

ஜெய்லானி தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் ஏ.ஏ.எம்.ரிஷாத் மொஹமத் இந்த நுழைவாயிலின் அவசியத்தை பிரபல சமூக சேவையாளர் அல்ஹாஜ்.எம்.எச்.எம்.ஹலீமிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய அதனை நிர்மாணித்து தர அவர் இணக்கம் தெரிவித்தார்.

இதற்கு அமைய முன்னாள் அதிபரின் கோரிக்கையை ஏற்று ஹலீம் ஹாஜியார் நிறைவேற்றியுள்ளார். சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் மிக அழகான பிரதான நுழைவாயில் ஒன்றை நிர்மாணித்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹோட்டலின் உரிமையாளரான பெண் கொடூர கொலை

## பங்குதாரரர் மீது சந்தேகம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



வெலிமடையில் போர்வையால் சுற்றப்பட்டவாறு அப்பகுதியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு அருகிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

புரங்வெல பிரதேசத்தில் வசிக்கும் 54 வயதுடைய ஹோட்டலின் உரிமையாளரான பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெலிமடை – சாப்புக்கடை பகுதியில் பெண் ஒருவர் காணாமல் போனமை தொடர்பில் அவரது மகள் வெலிமடைப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவுசெய்திருந்தார். அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தில் பாரிய வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் பிறிதொருவருடன் ஹோட்டல் ஒன்றையும் நடத்தி வந்துள்ளதாகவும் அந்த நபருடன் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக அந்த நபரே பெண்ணை வெட்டிக்கொலை செய்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் தலவாக்கலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# விசர்நாய்க்கடிக்கு தேவையான மருந்துகள் வழங்கிவைப்பு



**பூஜாபிடிய நிருபர்**

'லொஸ் ஏஞ்சல்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பு' பாம்பு விஷம் மற்றும் விசர்நாய்க்கடிக்கு தேவையான மருந்துகள் உள்ளிட்ட பல அத்தியாவசிய மருந்துகள் தொகையொன்றை நேற்றுமுன்தினம் (24) கண்டி தேசிய வைத்தியசாலைகளுக்கு அன்பளிப்பு செய்துள்ளது.

பத்து மில்லியன் ரூபா பெறுமதியான இந்த மருந்துப்பொருட்கள் கண்டி மாவட்டத்திலுள்ள கண்டி தேசிய வைத்தியசாலை, பேராதனை போதனா வைத்தியசாலை, ரிக்கிலகஸ்கட மாவட்ட வைத்தியசாலை மற்றும் பதஹேவாஹெட்டவிலுள்ள இரண்டு பிராந்திய வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டன

கண்டி ஹந்தான சர்வதேச பௌத்த கற்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் உடவத்தை விமலபுத்தி தேரர் மருந்துப்பொருட்களை கண்டி தேசிய வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் இரேஷா பெர்னாண்டோவிடம் வழங்கி வைத்தனர்.

# இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் மருத்துவ முகாம்







மலையக மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' அமைப்பானது அண்மையில் தனது 1000 மாவது வேலைத்திட்டமான "ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப்பொருளில் மாபெரும் மருத்துவ முகாமினை ஹப்புகஸ்தென்ன கல்லேல்ல அப்பர்வேவல்கெட்டிய கிராமிய வைத்தியசாலையில் மிக வெற்றிகரமாக நடாத்தியது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் குறிப்பாக பெருந்தோட்ட பகுதியில் அதிக மருந்து தட்டுப்பாடு காணப்படுகின்ற ஒரு நிலையில் ஹப்புகஸ்தென்ன பிரதேசத்தில் 11 தோட்டப்புறங்கள் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த மக்கள் பயன் பெறும் வகையில் இந்த மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர்.ரமேஷ்வரனின் ஆலோசனையில் உயர்மட்ட நிர்வாக குழுவினர், அங்கத்தினர்கள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் முழுமையான பங்கு பற்றுதலோடு இம்முகாம் நடத்தப்பட்டது. சப்ரகமுவ மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் K.B கன்னங்கரவின் வழிநடத்தலுக்கு அமைய இரத்தனபுரி பிரதேச சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் திருமதி ஸ்ரீனி அழகப்பெரும தலைமையில் 14 வைத்தியர்கள், 5 தாதியர்கள் உள்ளிட்ட 35க்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் இவ் வைத்திய முகாமில் பெரும்பங்காற்றினர்.

சுமார் 1800 பேர் வரை கலந்துகொண்டிருந்த இவ் மருத்துவ முகாமில் பல நோய் அறிகுறிகள், பல தொற்று நோய்கள் இனங்காணப்பட்டதோடு அவர்களுக்கான மருந்துக்கள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டதாக அமைப்பின் ஊடக இணைப்பாளர் ஊடகவியலாளர் ஆர். அஜித்குமார் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## தொழில்நுட்ப பாவனை மூலம் அரச செலவினங்களை குறைக்க முடியும்

### உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

**ஒலுவில் விசேட நிருபர்**



தொழில்நுட்ப பாவனை மூலம் அரச நிறுவனங்களின் செலவினங்களை குறைத்து, அரச சேவையினை வெற்றி பாதையில் இட்டுச் செல்ல முடியுமென தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

'தொழில்நுட்ப மாற்றத்தின் மூலம் நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாவது சர்வதேச ஆய்வரங்கு ஒலுவில் வளாகத்தில் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். மஜீத் தலைமையில் நடைபெற்றது இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டியிருக்கின்ற இக்கால கட்டத்தில் கற்றல், கற்பித்தல், மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகள் முற்றிலுமாக 'டிஜிட்டல்'தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்வதன் மூலம் பல்கலைக்கழகம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் செலவினங்களை குறைத்து அரச சேவையை வெற்றி பாதையில் கொண்டு செல்ல முடியும்.

மீனவர்களுக்கான நவீன தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ள தொழில்நுட்ப பீடம், கடற்தொழில் துறை சம்பந்தப்பட்ட நிபுணத்துவ கற்கை நெறிகள் பலவற்றை உருவாக்குகின்ற பகீரத முயற்சியில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

எமது பிராந்திய மக்களின் பிரதான வாழ்வாதார தொழில்களை மையப்படுத்தி, விவசாய தொழில்நுட்ப கற்கை நெறி, மீனவ தொழில்நுட்ப கற்கை நெறிகளை உருவாக்க கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் உந்து சக்தியாக பங்களிப்பு செய்ய கூடிய வகையில் ஆராய்ச்சிகள் இருக்க வேண்டுமென்றார்.

## திருகோணமலை 03 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நீர் பவுசர்கள் வழங்கல்

**கிண்ணியா மத்திய நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தில் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் சிரமம் உள்ள 03 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நேற்று முன்தினம் (25) தண்ணீர் பவுசர்கள் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் வழங்கி வைக்கப்பட்டது.

மொரவெவ, கோமரன்கடவல மற்றும் பதவிஸ்ரீபுர ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கே இந்த தண்ணீர் பௌசர்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபிலனுவான் அத்துக்கோரளவின் வேண்டுகோளுக்கிணங்க, பிரதமர் வழங்கி வைத்தார்.

## களுதாவளையில் பட்டிமன்றமும் மாணவர் ஊக்குவிப்பும்

**கல்லாறு தினகரன் நிருபர்**

கதிரவன் பட்டிமன்ற பேரவையும், களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலமும் இணைந்து வழங்கும் பட்டிமன்றமும் மாணவர் ஊக்குவிப்பும் களுதாவளை மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) ஒன்றுகூடல் மண்டபத்தில் நாளை (28) ஞாயிறு காலை நடைபெறும்.

திருஞானசம்பந்தர் குருகுல தலைவர் ப.குணசேகரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம அதிதியாக 2 ஆவது மாவட்ட துணை ஆளுநர் அரிமா இரஞ்சித பெர்ணான்டோவும் சிறப்பு அதிதிகளாக அரிமா சுமித் ஜெயசுந்தரம், அரிமா க.லோகேந்திரன், அரிமா யோ.திரவியநாத், சண் பன்சி உரிமையாளர் ச.சிவபாதசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

## கல்லடி இராமகிருஷ்ண மிஷனுக்கு தென்னை, மஞ்சள் கன்றுகள்



**காரைதீவு குறூப் நிருபர்**

கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் உள்ள வீட்டுத் தோட்டத்தை மேம்படுத்த மண்முனை வடக்கு பிரதேச செயலகம் தென்னை மற்றும் மஞ்சள் கொண்ட 50 மரக்கன்றுகளை வழங்கியது. இ.கி.மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் அவற்றை பொறுப்பேற்றுக் கொண்டார்.

## வாகனேரியில் திருவிழா உற்சவத்தில் வாய்த்தர்க்கம்; ஒருவர் மரணம், இருவர் காயம்

**பாசிக்குடா, கல்குடா தினகரன் நிருபர்கள்**

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி பிரதேசத்தில் ஆலய திருவிழாவில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கருணாரத்ன தெரிவித்தார்.

வாகனேரி திரௌபதி அம்மன் ஆலயத்தில் சடங்கு உற்சவம் இடம்பெற்று வந்த நிலையில் ஆலயத்தில் சிலருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக கலவரம் ஏற்பட்டது. இந்த நிலையில் வாகனேரி குளத்துமடு முருகன் ஆலய வீதியினைச் சேர்ந்த நடராஜா ரமேஸ்காந்தன் (வயது 19) என்ற இளைஞர் மரணமடைந்துள்ளதுடன், நடராஜா கணேசன் (வயது 19), தியாகராஜா திலீபன் ஆகிய இருவர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மற்றையவர் கிசிச்சையின் பின்னர் வீடு சென்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும், குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியுமான கருணாரத்ன தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



மண்முனைப்பற்று கல்விக் கோட்ட மட்டத்தில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் ஆரையம்பதி மகா வித்தியாலய மாணவர்கள் வில்லிசை பாட்டு போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர். அதிபர் எஸ். சந்திரலிங்கத்தின் நெறியாள்கையில் பயிற்றுவிக்கப்பட்ட இம் மாணவர்கள் அதிபருடன் காணப்படுகின்றனர். (படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)

## விவசாய பாடநெறியை மட்டம் 7 வரை உயர்த்த கோரிக்கை

**திராய்க்கேணி நிருபர்**



விவசாய பாடநெறியை மட்டம் 7 வரை உயர்த்துவதற்கான கோரிக்கை அடங்கிய ஜனாதிபதிக்கான மகஜர் கிழக்கு மாகாண ஆளுனரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

ஆளுநர் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த போதே மகஜர் கையளிக்கப்பட்டது.

இம்மகஜர் விவசாய மாணவர்கள் சங்கத்தின் தலைவர் மொகமட் அஸ்பாக்,பிரதித் தலைவர் இன்சாமுல் ஹக் ஆல் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

விவசாய மாணவர்கள் சங்கம் பல இடர்களுக்கு மத்தியில் அன்று உருவாக்கப்பட்டது.முள் நிறைந்த காட்டில் மலர்ந்த ரோஜா மலர்தான் இது.இதை உருவாக்கி இன்று வரை கொண்டு வந்த பெருமை முன்னாள் தலைவர்களான ஜக்கீர், சப்றத் ஆகியோரையே சாரும்.

ஜக்கீர் அன்று மாணவன் இன்று வருகைதரு விரிவுரையாளர் சப்றத்தும் இன்று விவசாய டிப்ளோமா தொழில் பயிற்சியாளர்.

## கல்முனை தமிழருக்கு அநீதியா? கல்முனை தமிழ் மக்கள் கேள்வி

**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனை பிராந்திய தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடப்படும் அநீதிகளை, கொடுமைகளை, அநியாயங்களை தட்டிக் கேட்க யாருமில்லையா?என்று கல்முனை பிராந்திய தமிழ் மக்கள் கேள்வி எழுப்பி துண்டு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.


அந்த துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு ) பிரதேச செயலக பிரிவானது 1989 ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1993 ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதியுடன் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது.

இருந்தபோதிலும், பல்வேறு அரசியல் தலையீடுகள் காரணமாக அதன் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படாமல் மறுக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக உண்ணாவிரதம் உட்பட்ட பல்வேறு போராட்டங்கள் கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே.

30 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வமான இணையதளத்தில் இருந்து தற்போது நீக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த 29 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த அநீதியை தட்டி கேட்க யாரும் இல்லையா? என்று கேட்டு இப் பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கின்றது .



## மட்டக்களப்பில் மண்ணெண்ணெய் விநியோக நடவடிக்கை ஆரம்பம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாடு QR முறைமையினை தொடர்ந்து நிவர்த்திக்கப்பட்டது.

இருந்த போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு கடந்த இரண்டு மாதங்களாக காணப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் முதல் ஆரையம்பதி பல நோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ஒரு குடும்ப அட்டைக்கு 1000 ரூபாவிற்கும், மீனவர் சங்கத்தின் சிபாரிசுடன் வரும் மீனவர்களுக்கு 20 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த எரிபொருள் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள 13,200 லீற்றர் மண்ணெண்ணெயை இரண்டாவது நாளாக நேற்றும் மக்களுக்காக விநியோகிக்கப்பட்டு வருவதுடன், பூநொச்சி முனை, பாலமுனை மற்றும் கிரான் குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

### மருதமுனையில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான

## பொருட்களை திருடியவர் பொலிஸாரால் கைது

**பெரியநீலாவணை விசேட நிருபர்**



பெரியநீலாவனை பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட மருதமுனை பிரதேசத்தில் நீண்ட காலமாக தொடர்ச்சியாக திருட்டு சம்பவத்தோடு ஈடுபட்டு வந்த 22 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் (25) கைது செய்துள்ளனர்.

மருதமுனை பிரதான வீதியில் உள்ள துவிச்சக்கர வண்டி மற்றும் அதன் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் பிரபல வியாபார நிலையம் ஒன்றில் வேலை செய்து வந்த குறித்த சந்தேக நபர் தொடர்ச்சியாக துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்களை தூர இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதாக பொலிசாருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து,

பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசேட தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இதனை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், சந்தேக நபரால் கடைசியாக விற்பனை செய்யப்பட்ட சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான சைக்கிள் உதிரிப்பாகங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

## வாழ்வாதார உதவியாக கறவைப் பசு



**கிண்ணியா தினகரன் நிருபர்**

தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பயனாளிகளுக்கு முஸ்லிம் எய்ட் நிறுவனத்தினால் வாழ்வாதார உதவியாக கறவை பசு வழங்கும் நிகழ்வு கல்மெட்டியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் நேற்று (26) நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச். என்.ஜெயவிக்கிரம,தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி,திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் பிரதானி எ.சி.பைசர்கான்,அபிவிருத்தி உத்தியோகத்தர் நியாஸ் இப்னு சுகுத் ஆகியோருடன் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஒகஸ்ட் 27
சனிக்கிழமை



# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம்




**பருத்தித்துறை விசேட நிருபர்**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம் நேற்றையதினம் இடம்பெற்றது. நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் ஒகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நல்லைக்கந்தனின் தீர்த்தோற்சவமான நேற்றைய தினம் காலை விசேட பூஜைகள் நடைபெற்று மூலஸ்தானத்தில் வேலாக வீற்றிருக்கும் வேலன், வள்ளி தெய்வானை சமேதரராக வலம்வந்தார். வெள்ளி எலி வாகனத்தில் பிள்ளையாரும், தங்க மயில் வாகனத்தில் முருகப்பெருமானும் வலம் வந்தனர். நாட்டின்பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த பக்தர்கள் திரண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். இருபத்தைந்து நாள் கொண்ட மகோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை (26) மாலை கொடியிறக்கமும் சனிக்கிழமை(27) மாலை பூங்காவனமும் ஞாயிற்றுக்கிழமை(28) வைரவர் உற்சவத்துடனும் நிறைவு பெறவுள்ளது.

## நல்லூர் தேர் திருவிழாவில் 30 பவுண் நகை களவு

### ஐவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

நல்லூர் ஆலய தேர்த்திருவிழாவின் போது 30 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இத்திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறுவன் ஒருவனும் நான்கு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் ஆலய வருடாந்திர தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. அதன் போது பல்லாயிரக்கணக்கானோர்கலந்து கொண்டனர்.

அந்நிலையில் கூட்ட நெரிசல்களை பயன்படுத்தி இரண்டு தாலிக்கொடிகள் உள்ளிட்ட சுமார் 30 பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன. அது தொடர்பில் ஆலய உற்சவ கால பொலிஸ் பணிமனையில் 07 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை பெண்ணொருவரின் சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளை கையும் களவுமாக பெண்ணொருவர் சிவில் உடையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்த பெண் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர் நீர்கொழும்பு பகுதியை சேர்ந்தவர் எனவும் , அவருடன் ஆலயத்திற்கு வருகை தந்திருந்த மேலும் மூன்று பெண்களையும் பொலிஸார் அடையாளம் கண்டு கைது செய்துள்ளனர்.

அதேவேளை ஆலய சூழலில் திருட்டுக்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிறுவன் ஒருவனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள ஐந்து பேரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### இராணுவத்தினர் வசமிருந்த

## கட்டுவன் - மயிலிட்டி வீதி திறப்பு



கட்டுவன் மயிலிட்டி வீதியில் இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்த 480 மீற்றர் வீதியானது, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதனை நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இராணுவ தளபதி விக்கும் லியனகே திறந்துவைத்துள்ளார். வலிகாமம் வடக்கில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இங்குள்ள காணிகளின் ஒருதொகுதி கடந்த நல்லாட்சி அரசில் விடுவிக்கப்பட்டன. இறுதியாக கட்டுவன் மயிலிட்டி வீதி விடுவிக்கப்பட்டு அதன் மேற்குப்புறமான மக்களின் காணிகளும் விடுவிக்கப்பட்டன. 'எனினும் இவ்வீதிக்கு இடையில் 400 மீற்றர் பகுதி (மயிலிட்டி தெற்கில்) வீதியில் வழமையான வீதியை முட்கம்பி வேலியால் மூடி வளைத்து விடுவித்ததுடன் வழமையான வீதி உட்பகுதிக்குள் சென்றது. இதனால் அருகிலுள்ள தனியார் மக்கள் காணியூடாக பயணித்தனர். இந்த துண்டு வீதியை விடுவிக்க மறுத்தனர். இதற்கு இராணுவ முட்கம்பி வேலிக்கு பின்னால் அருகில் விமானப்படையினரின் முட்கம்பி வேலி உள்ளது.

இதன் பின்னால் விமான நிலையத்தினை சுற்றி பாதுகாப்பு எல்லை மண் அரண் உள்ளது. இதனால் 1990 இடம்பெயர்வுக்கு முன் இருந்தது போல வழமையான வீதி துண்டினை விடுவிப்பதாயின் இந்த முட்கம்பி வேலியை 25 மீற்றர் நகர்த்தவேண்டும் என்பதுடன் வேலி மண் அரண் பகுதியிலேயே அமைக்கவேண்டும்.

ஆனால் விமான நிலையத்தின் பாதுகாப்பு பிரச்சினை விமான நிலையத்துக்கென விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனால் விடுவிக்க முடியாது என படைத்தரப்பு பின்னடித்தது.

இவ்வாறான நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தில் அங்கஜன் இராமநாதன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு இந்த வீதி விடுவிக்க வேண்டிய அவசியத்தை தெ ளிவுபடுத்தினர். இதன்போது முன்னாள் ஜனாதிபதி இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவுக்கு விடயத்தை ஆராயுமாறு கோரியிருந்தார்.

இதன்பின்னர் Drone படங்கள் எடுத்து விமானப்படையினரிடம் இதுதொடர்பில் கலந்துரையாடி இராணுவத்தினரிடம் சுமார் 6 மீற்றர் அப்பால் வேலியை நகர்த்த சம்மதம் தெரிவித்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரை அழைத்து முடிவு எடுக்கப்பட்டது.

இதன்பின்னர் இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினர் முதற்கட்ட வேலைகளை செய்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் புனரமைப்பு பணிகளை மேற்கொண்டனர். இந்த 480 மீற்றர் வீதியை புனரமைப்பு செய்ய 29.4 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் 5 மீற்றர் அகலமான வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டு தற்போது பாவனையிலுள்ள வீதியுடன் இணைக்கப்பட்டது.

கட்டுவன் மயிலிட்டி வீதியின் இடைப்பட்ட பகுதி விடுவிக்கப்பட்டு இணைக்கப்படுவதால் தெல்லிப்பளையால் வருபவர்கள் யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு இலகுவாக பயணிக்க முடியும் என்பதுடன் மயிலிட்டி பகுதி மக்களும் இந்த வீதியை பயன்படுத்தி தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு செல்லமுடியும்.

அத்துடன் இங்கு இடம்பெறும் பஸ் சேவை மயிலிட்டி சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாக கிராமக்கோட்டு சந்தியூடாக திரும்பி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வீதியால் செல்லும் பஸ் திறக்கப்பட்ட வீதியூடாக செல்லுமாயின் தெல்லிப்பளை வைத்தியசாலை, தெல்லிப்பளை சந்திக்கு செல்வோருக்கும் இலகுவாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பலாலி வீதி குரும்பசிட்டி, மல்லாகம் ஊடாக யாழ்ப்பாணம் விமான நிலையம், மயிலிட்டிக்கு வருபவர்கள் கட்டுவன் மயிலிட்டி வீதியூடாக செல்லவும் முடியும். இது இலகுவான வீதியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நல்லூர் ஆலய வளாகத்தில்

## ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு விளக்கமறியல்

**யாழ்.விசேட நிருபர்**

நல்லூர் ஆலய சூழல் உட்பட யாழ்ப்பாண நகர் பகுதிகளில் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்ட ஐவரை எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதில் 03 பெண்கள் , ஆணொருவர் மற்றும் அவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் ஆகியோர் அடங்குவர்.

அதேவேளை இவர்களிடமிருந்து கைக்குழந்தை ஒன்றும் ஆறு சிறுவர்களும் மீட்கப்பட்டுள்ளனர். அதில் கைக்குழந்தையை தாயுடன் இருக்க அனுமதித்த நீதவான் ஏனைய 06 சிறுவர்களையும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

நல்லூர் ஆலய சூழல் மற்றும் யாழ்ப்பாண நகர் பகுதிகளில் கைக்குழந்தைகளுடன் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்தனர்.

அதில் நல்லூர் பகுதியில் ஆலயத்திற்கு வருவோருக்கு ஊதுபத்தி விற்பனை என இடையூறு விளைவிக்கும் முகமாக சிலர் நடந்து கொண்டனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் , பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து குழுக்களாக வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியிலுள்ள விடுதியொன்றில் தங்க வைக்கப்பட்டு , ஊதுபத்தி விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

அந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு யாழ்ப்பாண பொலிஸார் விடுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

அதன் போது ஊதுபத்தி விற்பனைக்கு என அழைத்து வரப்பட்ட 03 பெண்கள், கைக்குழந்தை ஒன்று, 06 சிறுவர்கள், ஆண் ஒருவர் மற்றும் இவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் ஆகியோரை பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் அவர்களை ஆஜர்படுத்தினர்.

அதனையடுத்து நீதவான், விடுதி உரிமையாளர், ஆண் ஒருவர் மற்றும் 03 பெண்கள் ஆகியோரை எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டதுடன், கைக்குழந்தையையும் தாயுடன் இருக்க அனுமதித்தார்.

அதேவேளை 06 சிறுவர்களையும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்க நீதிமன்றில் ஆஜர்படுத்தும் வரையில் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் கண்காணிப்பில் வைத்திருக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 95ஆவது ஜனனதினம்



முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 95ஆவது பிறந்ததினம் நேற்றைய தினம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்றலில் அமைந்துள்ள அமிர்தலிங்கத்தின் திருவுருவசிலைக்கு முன்பாக காலை 8:00 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வினை பண்ணாகம் அண்ணாகலை மன்றம் மற்றும் பண்ணாகம் கிராம அபிவருத்தி சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது அமிர்தலிங்கத்தின் திருவருட்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதோடு பொதுமக்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. 95ஆவது பிறந்ததினத்தை நினைவுகூரும் முகமாக தமிழரசுகட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனால் கேக் வெட்டப்பட்டு பரிமாறப்பட்டது.

பிறந்தநாள் நிகழ்வின் போது தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வலிமேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன், வலிமேற்கு பிரதேச சபையின் தமிழரசு கட்சி உறுப்பினர்கள், பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர், பண்ணாம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## மோதல் சம்பவத்தில் இருவர் காயம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த 18 வயதான இளைஞனொருவனின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதுடன்,மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவரின் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது. இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மீசாலையில் விபத்து முதியவர் படுகாயம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை ஐயா கடைச்சந்திப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இரண்டு மோட்டார்சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் மீசாலை பங்களா வீதிப்பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# SLT-MOBITEL அனுசரணையில் Hack: AI 2021 வெற்றிகரமாகப் பூர்த்தி

SLTMOBITEL, அனுசரணையில் இடம்பெற்ற The Hack:AI 2021 Hackathon வெற்றிகரமாக நிறைவுற்றது. இந்த நிகழ்வின் வெற்றியாளர்களினால் நிலைபேறான வாழ்க்கைக்கு அவசியமான புத்தாக்கமான தீர்வுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

பாடசாலைகள் பிரிவில் கொழும்பு கேட்வே கல்லூரியின் 'Calori' வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழகங்கள் பிரிவின் வெற்றியாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'Prostasia' வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.




SLT இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "Hack:AI 2021 Hackathon இன் சவாலாக நிலைபேறான தீர்வுகளை வெளிப்படுத்துவது மற்றும் நிஜ உலக பிரச்சனைகளுக்கு தீர்வுகளைத் தேடுவது போன்றன அமைந்திருந்தன. தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை இந்தப் போட்டி வெளிப்படுத்தியிருந்தது என்பதில் SLTMOBITEL நம்பிக்கை கொண்டிருந்ததுடன், ஆரோக்கியமான உலகை ஊக்குவிப்பது என்பதிலும் கவனம் செலுத்தியிருந்தது. பங்கேற்றிருந்தவர்கள் மற்றும் பரந்தளவு அணிகள் போன்றவற்றினூடாக இயந்திரப் பயிலல் மற்றும் artificial intelligence ஊடாக புதிய சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் நாம் பெருமை கொள்கின்றோம். சகல அணிகளும் விசேட கௌரவிப்புக்கு ஏற்புடையன என்பதுடன், அவர்களின் கடின உழைப்பு மற்றும் பங்களிப்புக்காக நாம் நன்றி தெரிவிக்கின்றோம்." என்றார்.

STEMUP கல்வி மையத்தின் பணிப்பாளர் பிரபாத் மன்னப்பெரும கருத்துத் தெரிவிக்கையில், "Hack:AI போட்டியினூடாக, பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களை கவர்ந்து, AI மற்றும் இயந்திரப் பயிலலை பயன்படுத்தி நிஜ உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஊக்கமளிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத் தலைமுறைகளுக்கு நிலைபேறாண்மையை முன்னெடுத்துச் செல்வது மற்றும் ஆரம்பநிலை வர்த்தகங்களைக் கட்டியெழுப்புவது மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்கங்களை அறிமுகம் செய்வது போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைந்திருக்கும்." என்றார்.

Hack:AI 2021 இனால் இளைஞர்களுக்கு, நிஜ உலகப் பிரச்சனைகளுக்கு Artificial Intelligence (AI) மற்றும் இயந்திரப் பயிலல் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி புத்தாக்கமான தீர்வுகளை வடிவமைப்பதற்கு வாய்ப்பளித்திருந்தது.




## Rocell இன் 75ஆவது கருத்திட்ட மையம் திறப்பு



Rocell, இலங்கையின் கிழக்குக் கடற்கரையின் செழுமையான பாரம்பரியத்திற்கு ஏற்ற வகையில், அதன் நேர்த்தியான உட்புறங்களை அழகூட்டுவதற்காக, கல்முனையில் தனது புதிய Concept Centre (கருத்திட்ட மையம்) இனை திறக்கிறது. நாடளாவிய ரீதியில் பரந்து விரிந்த காட்சியறை வலையமைப்பு மற்றும் உலகெங்கிலும் உள்ள விநியோகஸ்தர்களின் ஆதரவுடன், Royal Ceramics Lanka நிறுவனத்தின் முதன்மையான தரக்குறியீடான Rocell, உயர்தர தரை ஓடுகள், சுவர் ஓடுகள், குளியலறை உபகரணங்களுக்கான பெயராக மாறியுள்ளது. அத்துடன் இந்த வர்த்தகக் குறியீடானது, உலகின் சிறந்த வடிவமைப்பாளர்கள் மற்றும் வடிவமைப்புக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதுடன், அது உலகின் மிகச் சிறந்தவற்றை எமது நாட்டிற்கு கொண்டு வந்து சேர்க்கிறது.

கல்முனை 12 இல் அமைந்துள்ள புதிய Concept Centre ஆனது, Rocell யின் 75ஆவது காட்சியறையாக திகழ்கிறது. இது Rocell யின் நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் காட்சியறை வலையமைப்பின் ஒரு அங்கமாகும். 4,780 சதுர அடி பரப்பளவில், இரண்டு மாடிகளைக் கொண்ட, தனித்துவமான இடப்பரப்பில், பாரம்பரிய ஷொப்பிங் அனுபவத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. 700 இற்கும் மேற்பட்ட வகையான ஓடுகள் (Tiles), சேகரிப்பு அம்சங்கள் கொண்டவைகள் (collections), மேற்பரப்பு அலங்காரங்கள் (surface finishes) மற்றும் 70இற்கும் அதிக தனித்துவமான குழியலறை பெரும் சாதனங்கள் (Bathware Masterpieces) ஆகியவற்றை இது கொண்டுள்ளது.

# மின் கட்டணத்தை மறுபரிசீலனை செய்யுமாறு JAAF கோரிக்கை




மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL) இலங்கை மின்சார சபைக்கு (CBSL) அனுமதியளித்துள்ளதைத் தொடர்ந்து தொழிற்சாலைகளுக்கு உரித்தான வேலைப்பளுவற்ற (Offpeak) மற்றும் பகல் நேர (Daytime) மின்சார கட்டணங்கள் மிக வேகமாக அதிகரித்துள்ளன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முதற்கட்ட யோசனைப்படி, தொழில்துறைக்கான உச்சகட்ட மின்சாரக் கட்டணம் 6.85 ரூபாவில் இருந்து 14.50 ரூபாவாகவும், பகல் நேரக் கட்டணம் 11.00ரூபாவில் இருந்து 18.50 ரூபாவாகவும் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. கூட்டு ஆடை சங்கங்கள் மன்றம் (JAAF) PUCSLஇன் கோரிக்கையின் பேரில் யோசனைகளை முன்வைத்தது, அங்கு PUCSLஇன் அடிப்படை யோசனையின்படி தொழில்துறைக்கான உச்சநிலை மற்றும் பகல்நேர மின் கட்டண திருத்தங்களுக்கு JAAF எந்த யோசனையையும் முன்வைக்கவில்லை. ஆனால், உத்தேச இறுதி கட்டண அதிகரிப்பின்படி தொழில்துறையில் 113% வேலைப்பளுவற்ற (Offpeak) மின் கட்டண உயர்வு அசாதாரணமானது மற்றும் தொழில்துறைக்கு தீங்கு விளைவிக்கும் என்று JAAF சுட்டிக்காட்டியுள்ளது. JAAF இறுதிக் கட்டண உயர்வை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது மேலும் ஒவ்வொரு கட்டத்திலும் உத்தேச கட்டணங்கள் சுமார் 50% குறைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபைக்கு (CEB) ஏற்படும் பாரிய நட்டத்தைத் தவிர்ப்பதற்கு இந்தத் திருத்தங்கள் முக்கியமானது என்பதை தொழில்துறையினர் நன்கு அறிவார்கள்.

JAAF சுட்டிக்காட்டிய விடயங்களைக் கருத்திற் கொள்ளாமல் வேலைப்பளு அல்லாத நேரம் மற்றும் பகல்நேர கட்டண அதிகரிப்பு அங்கீகாரம்,, 12வது தொகுதிக்கு முதலில் அங்கீகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணங்களை விட அதிகமாகும். மேலும், ஆச்சரியப்படும் விதமாக, பகல் நேரக் கட்டணங்களுக்கான திருத்தங்கள் முதலில் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை விட மூன்று மடங்கு அதிகம். கீழே உள்ள அட்டவணை முந்தைய, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட பகல்நேர மற்றும் வேலைப்பளு அல்லாத நேரங்களுக்காக திருத்தப்பட்ட மின் கட்டணங்களைக் காட்டுகிறது.

ஆடைத் தொழில்துறையின் தேவைகள் தொடர்பாக தொழில்துறை சார்பாக JAAF முன்வைத்த யோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதால், உத்தேச இறுதி தொழில்துறை மின்சாரக் கட்டணங்கள் குறித்து JAAF தனது வருத்தத்தை வெளிப்படுத்துகிறது.

OffPeak கட்டணங்களின் அதிகரிப்பு OffPeakன் நோக்கத்தையே குலைத்துவிட்டதாக JAAF வலியுறுத்துகிறது. அதாவது, OffPeak நேரத்தில் வணிகங்கள் தங்கள் செயல்பாடுகளை நடத்த ஊக்குவிப்பதே இதன் நோக்கம். இந்த நடவடிக்கையானது தொழில்துறையின் செயல்பாட்டுச் செலவைக் கூட்டிச் சேர்க்கும். இதன் விளைவாக, வேலைப்பளு இல்லாத நேரங்களில் பணியாளர்களை நியமிப்பதற்காக அதிக செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கும். மேலும், ஆடைத் தொழில் போன்ற ஆற்றல் மிகுந்த தொழில்கள் 24 மணி நேரமும் இயங்குகின்றன. அங்கு, OffPeak மின்சாரக் கட்டணங்களின் விரைவான அதிகரிப்பு, முழுத் தொழிற்துறையின் மின்சாரக் கட்டணங்களில் மிகவும் அசாதாரணமான விளைவை ஏற்படுத்தும், எனவே அது எதிர்காலத்தில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு வழிவகுக்கும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அணியக்கூடிய வங்கியியல் மூலம் வங்கித்துறையில் புரட்சி ஏற்படுத்தும் ComBank



கொமர்ஷல் வங்கியானது டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் புதிய உயரங்களை எட்டியுள்ளது, இலங்கையில் அணியக்கூடிய தொழில்நுட்பத்தின் பகுதிக்கு வங்கியை எடுத்துச் செல்லும் முதல் வங்கி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

டிஜிட்டல் கொடுப்பனவு சேவை தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆப்பிள் கைக்கடிகாரங்களில் வங்கியின் 'ஃப்ளாஷ்' டிஜிட்டல் கணக்கிற்கான அணுகல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களின் ஒருங்கிணைப்புடன் வங்கி நாட்டின் முதல் 'அணியக்கூடிய வங்கி Wearable Banking' தயாரிப்பை அடைந்துள்ளது.

ஐபோன்களுடன் இணைக்கப்பட்ட ஆப்பிள் கைக்கடிகாரங்களை வைத்திருக்கும் ஃபிளாஷ் கணக்கு வைத்திருப்பவர்கள் இப்போது தங்கள் கணக்கு நிலுவைகளைச் சரிபார்க்கலாம் மற்றும் தங்கள் கைக்கடிகாரங்களில் உள்ள ஸ்மார்ட்வாட்ச்களில் இருந்து பணம் செலுத்துவதற்கான கோரிக்கைகள் மற்றும் பில் பகிர்வு கோரிக்கைகளை தங்கள் தொலைபேசிகளை அடையாமலேயே பார்க்கலாம் என்று வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு சனத் மனதுங்க கூறுகையில், "இந்த சமீபத்திய கண்டுபிடிப்பு குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." ஸ்மார்ட்வாட்ச்கள் இனி தொழில்நுட்ப நிபுணர்கள் என்று அழைக்கப்படுபவர்களின் வித்தை அல்ல. கணிசமான வாடிக்கையாளர் பிரிவினருக்கு வசதியை மேம்படுத்துவதில் அவர்கள் வளர்ந்து வரும் பங்கு வகிக்கின்றனர், இது எதிர்வரும் ஆண்டுகளில் கணிசமாக வளரும் என்று எதிர்பார்க்கிறோம். டிஜிட்டல் வங்கிச் சேவையில் முன்னணியில் இருக்கும் கொமர்ஷல் வங்கி, அணியக்கூடிய வங்கிச் சேவை வடிவில் மற்றொரு திருப்புமுனை வங்கித் தீர்வை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது.

இந்த முன்முயற்சியின் முதல் படி கணக்கு பார்வையை செயல்படுத்துதல் மற்றும் நிதி பரிமாற்ற கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துகிறது என்றாலும், அணியக்கூடிய வங்கியின் செயல்பாட்டை கணிசமாக மேம்படுத்தும் பில் கொடுப்பனவுகள் மற்றும் சொந்த கணக்கு பரிமாற்றங்கள் போன்ற கூடுதல் அம்சங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியத்தை வங்கி ஏற்கனவே ஆராய்ந்து வருகிறது என்றார்.

# PET பிளாஸ்டிக்கை அடையாளம் கண்டு அப்புறப்படுத்த பொதுமக்களை ஊக்குவிக்கும் Coca-Cola Sri Lanka



குளிர்பானங்கள், சானிடைசர்கள், மவுத் வாஷ், கை கழுவும் திரவம், அழகு சாதனப் பொருட்கள், ஜூஸ், ஏர்ஃப்ரெஷ்னர்கள், பாத்திரங்களைக் கழுவும் திரவம், தட்டுக்களுக்கான திரவங்கள், மருந்துகள் மற்றும் சமையல் பாத்திரங்களைக் கழுவும் திரவம் உட்பட PET பிளாஸ்டிக் பேக்கேஜிங் செய்யப்பட்ட பலதரப்பட்ட பொருட்களை சராசரி குடும்பமொன்று அதிக அளவில் பயன்படுத்துகிறது. இலங்கையில் உள்ள CocaCola இந்த இக்கட்டான காலங்களிலும் வீட்டில் கிடைக்கும் பல மீள்சுழற்சி செய்யக்கூடிய PET பிளாஸ்டிக் பொதிகளை பொறுப்புடன் அப்புறப்படுத்துவதை உறுதி செய்ய பொதுமக்களை ஊக்குவிக்கிறது.

பிளாஸ்டிக் பொருளை மீள்சுழற்சி செய்ய முடியுமா இல்லையா என்பதைச் சரிபார்ப்பது மிகவும் எளிமையானது. பேக்கேஜின் கீழே அல்லது பக்கவாட்டில் அமைந்துள்ள பிளாஸ்டிக் அடையாளக் குறியீட்டைச் சரிபார்ப்பதன் மூலம் இதைச் செய்யலாம். "1" என்ற எண்ணைக் கொண்ட பிளாஸ்டிக் அடையாளக் குறியீடுகள் முழுமையாக மீள்சுழற்சி செய்யக்கூடிய PET தயாரிப்புகள் ஆகும். இந்த எளிய முறையைப் பயன்படுத்துவதன் மூலம், "1" என்ற எண் கொண்ட அனைத்து பிளாஸ்டிக் பாட்டில்களையும் எவரும் எளிதாக வீட்டில் சேகரித்து அருகிலுள்ள 'Give Back Life' தொட்டியில் அப்புறப்படுத்தலாம். Waste2Value app ஐ பதிவிறக்குவதன் மூலம், அருகிலுள்ள'Give Back Life' தொட்டியைக் கண்டுபிடித்து அனைத்து PET பிளாஸ்டிக் பொருட்களையும் எளிதாகக் அப்புறப்படுத்திவிடலாம்.

CocaCola Beverages Sri Lanka Limited இன் பொது விவகாரங்கள், தொடர்பாடல்கள் மற்றும் நிலைத்தன்மையின் பணிப்பாளர் தாமரி சேனாநாயக்க கூறுகையில், ''ஒரு சமூகப் பொறுப்புள்ள நிறுவனம் என்ற வகையில், PET பிளாஸ்டிக் கழிவு அல்ல, ஆனால் அது உள்ளார்ந்த மதிப்புடையது மற்றும் பொறுப்புடன் நிராகரிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இதற்காக மக்களைப் பயிற்றுவிப்பதும், முன்னளிப்பதும் முக்கியமானது, இதற்காக 12 மாவட்டங்களில் 10,000க்கும் மேற்பட்ட மக்களைச் சென்றடைந்த 100க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். PET பிளாஸ்டிக்கினால் ஏற்படும் மாசுபாட்டைக் குறைத்து, > EcoSpindles Pvt.Ltd உடன் மீள்சுழற்சி செய்வதன் மூலம் PET பிளாஸ்டிக் 'Give Back Life' என்பதை உறுதிப்படுத்தி, குடிமக்களை பரப்புரை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் உதவியால், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான சுத்தம் செய்யும் தூரிகைகள், விளக்குமாறுகள் அல்லது ஆடைகளுக்கான மறுசுழற்சி செய்யப்பட்ட பாலியஸ்டர் நூல் உட்பட பல பொருட்களை மறுசுழற்சி செய்து நாங்கள் தூய்மையான நாடாக மாற்றுவோம்.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் HNB Finance PLC – HNB Assurance PLC

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB Finance PLC, தனது வாடிக்கையாளர்களின் காப்புறுதித் தேவைகளை மிகவும் இலகுவாகவும் உகந்ததாகவும் பூர்த்தி செய்வதற்காக HNB Assurance PLC உடன் பிரத்தியேக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.




HNB Finance மற்றும் HNB Assurance ஆகியன அண்மையில் கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, வாடிக்கையாளர்கள் தனிப்பட்ட மற்றும் பிற பொது காப்பீட்டு சேவைகள் உட்பட நிறுவனத்தால் வழங்கப்படும் பல நன்மைகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும். HNB Assurance காப்பீட்டுச் சேவைப் பிரதிநிதி ஒருவர் HNB Financeன் ஒவ்வொரு கிளை அலுவலகத்திற்கும் நியமிக்கப்படுவார், எனவே வாடிக்கையாளர்கள் காப்பீட்டுச் சேவைகளை விரைவாக பெறக்கூடிய சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தைப் பெறுவார்கள்.

"எங்கள் வாடிக்கையாளர் அனுபவத்தின் தரத்தை மேம்படுத்த பல்வேறு நிறுவனங்களுடன் மிகவும் பயனுள்ள ஒத்துழைப்புகளை அடைய நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். HNB Assurance உடனான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இலங்கையின் மிகப் பெரிய நிதிச் சேவைக் குழுவான HNB குழுமத்தின் பலம் மற்றும் பல தனித்துவமான நன்மைகள் எமது வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் என்று கூற வேண்டும்." என HNB Finance PLCஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் தெரிவித்தார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து கருத்து தெரிவிக்கும் HNB Assurance PLCஇன் பிரதம நிறைவேற்று அதிகாரி லசித விமலரத்ன, "குழுவில் உள்ள மற்றுமொரு வலுவான நிறுவனத்துடன் இணைந்து வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எங்கள் காப்புறுதி சேவைகளை பரந்த அளவிலான வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் இணையற்ற வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவது எங்கள் வணிக உத்திகளில் முன்னணியில் இருப்பதால், HNB Finance வாடிக்கையாளர்கள் இந்த கூட்டாண்மையின் அதிகபட்ச பலன்களைப் பெற முடியும்." என தெரிவித்தார்.

# Greasemonkey.lk உடன் இணைந்துள்ள Orient Finance



ஜனசக்தி குழுமத்தின் கீழுள்ள முன்னணி நிதிச் சேவை வழங்குனரான Orient Finance PLC, தனது 41ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் வகையில், அதன் வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள் மற்றும் விலைக் கழிவுகளை வழங்குவதற்காக, இலங்கையின் மிகப் பெரும் வாகன இணைய வர்த்தகத் தளமான Greasemonkey.lk உடன் கைகோர்த்துள்ளது.

இந்த கூட்டாண்மையின் ஒரு பகுதியாக, Greasemonkey.lk ஆனது Orient Finance வாடிக்கையாளர்களுக்கு வாகன உதிரிப்பாகங்கள், வாகன பராமரிப்புப் பொருட்கள், எஞ்சின் ஒயில், மசகு எண்ணெய்கள், வாகன தரநிலை அறிக்கை பெறுவதற்கான சேவை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்டவற்றிற்கு பல்வேறு வகையான விசேட விலைக் கழிவுகளை வழங்குகிறது. அனைத்து Orient Finance வாடிக்கையாளர்களும் www.greasemonkey.lk மூலமான விசேட ஒன்லைன் சலுகைகளைப் பெறுவதற்காக, விசேட குறியீடு (special code) வழங்கப்படும்.

அந்த வகையில் இக்கூட்டாண்மை தொடர்பில், Orient Finance PLC நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான கே.எம்.எம். ஜபீர் கருத்துத் தெரிவிக்கையில், "எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்கு இந்த பெறுமதி சேர் சேவைகளை வழங்க Greasemonkey.lk உடன் இணைந்து பணியாற்றுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். நாம் எதிர்கொள்ளும் சவாலான நேரங்களில், இவ்வாறான பெறுமதி சேர் சேவைகளின் மூலம், வாடிக்கையாளர்கள் அவர்களது பணத்தை திறனான வகையில் பயன்படுத்துவதற்கும் பல்வேறு வழிகளில் செலவுகளை கட்டுப்படுத்துவதன் மூலமும் எமது வாடிக்கையாளர்களை வலுவூட்டுவதற்காக நாம் கடினமாக பாடுபட்டு வருகின்றோம். இதன் மூலமான கொள்வனவு நடவடிக்கைகளை ஒரு சில கிளிக்குகள் மூலம் மேற்கொள்ள முடிவதோடு, சிரமமின்றி வீட்டு வாசலுக்கே பொருட்கள் கொண்டு சேர்க்கப்படுவதால், எமது வாடிக்கையாளர்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியான வகையிலும் உரிய நேரத்தில் தீர்வுகள் வழங்கப்படுவதையும் இது உறுதி செய்கிறது. எமது வாடிக்கையாளர்கள் இந்த பிரத்தியேக சலுகையைப் பயன்படுத்தி அதன் பலனை அனுபவிப்பார்கள் என நாம் நம்புகிறோம்." என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த 4 தசாப்தங்களாக எமது வாடிக்கையாளர்கள், பணியாளர்கள், பங்குதாரர்கள் வழங்கி வரும் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு தொடர்பில் நாம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறோம். இவ்வருடம், நாம் எமது 41ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் நிலையில், இந்த கடினமான காலத்தில் எமது வாடிக்கையாளர்களுக்கு உதவ அதிக உச்ச சேவைகளை வழங்குவதற்காக எமது விதிமுறைகளை கடந்து நாம் எமது செயற்பாடுகளை புதுப்பித்துள்ளோம்," என்றார்.















ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு 'ஜனாதிபதி வர்ணம்' மற்றும் 'பல்கலைக்கழக வர்ணம்' வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் (25) பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு பெற்ற), பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மாஅதிபர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.





படங்கள்: சுதத் நிசாந்த



# ஆசிய கிண்ணத் தொடர் இன்று ஆரம்பம்: முதல் போட்டியில் இலங்கை - ஆப்கான்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை (27) ஆரம்பமாகவுள்ளது. இதன் முதல் போட்டியில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் இன்று மோதுகின்றன.

இலங்கையில் நடைபெற வேண்டிய இம்முறை ஆசிய கிண்ணப் போட்டிகள் இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மாற்றப்பட்டது. வழக்கமாக ஒருநாள் போட்டியாக நடைபெறும் ஆசிய கிண்ணம் வரும் ஒக்டோபரில் டி20 உலகக் கிண்ணப் போட்டிகள் இருப்பதால் அதற்கு தயாராகும் வகையில் டி20 வடிவிலேயே நடைபெறுகிறது.

இதில் தசுன் சானக்க தலைமையில் களமிறங்கும் இலங்கை பொருத்தமான அணி ஒன்றுடனேயே போட்டிகளுக்கு தயாராகி உள்ளது. சரித் அசலங்க, குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, பானுக்க ராஜபக்ஷ ஆகிய வீரர்கள் துடுப்பாட்டத்தை வலுப்படுத்துகின்றனர்.



பந்துவீச்சில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர இல்லாதது இலங்கை அணிக்கு பின்னடைவாக இருந்தபோதும் இந்தியா மற்றும் பாகிஸ்தானும் இதே நெருக்கடியை சந்திப்பது போட்டியின் சமநிலைக்கு உதவும். இந்திய முன்னணி வேகப் பந்து வீச்சாளர் பூம்ரா மற்றும் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷஹீன் அப்ரிடி ஆகியோரும் உபாதையால் இந்தத் தொடரில் விளையாடவில்லை.

வனிந்து ஹசரங்க முதற்கொண்டு இலங்கை சுழற்பந்து வரிசை வலுவாக இருக்கும் நிலையில் அனுபவமற்ற வேகப்பந்து வீச்சுக்கு சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன மற்றும் தசுன் ஷானக்கவின் பங்களிப்பு தீர்க்கமாக இருக்கும்.

மொத்தம் ஆறு அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரின் ஆரம்ப சுற்று ஏ மற்றும் பி என இரு குழுக்களில் நடைபெறும். ஏ குழுவில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஹொங்கொங் அணிகள் இடம்பெற்றிருப்பதோடு பி குழுவில் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கான் அணிகள் உள்ளன.

தொடர்ந்து இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறும். எனவே ஆப்கானிஸ்தானுடனான இன்றைய போட்டியில் இலங்கை அணி வெல்வது கட்டாயமாக உள்ளது.

இந்தக் குழுவின் அடுத்த போட்டியில் இலங்கை அணி பங்களாதேஷை எதிர் கொள்வதால் அந்தப் போட்டி ஒப்பீட்டளவில் சவாலானதாக இருக்கும். 2018 ஆசியக் கிண்ண போட்டியின் ஆரம்ப சுற்றில் இலங்கை அணி ஆப்கான் மற்றும் பங்களாதேஷிடம் தோற்று வெளியேறியமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஏ குழுவில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் ஆடும் பரபரப்பான போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை டுபாயில் நடைபெறவுள்ளது.

## பொதுநலவாய விளையாட்டு விழா: பதக்கம் வென்றோர் கௌரவிப்பு

இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற இலங்கை வீர, வீராங்கனைகளை கௌவிக்கும் நிகழ்வு ஒலிம்பிக் குழு இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை (25) நடைபெற்றது.

இதில் பொதுநலவாய போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பாரா ஈட்டி எறிதல் வீரர் பாலித பெர்னாண்டோ, வெண்கலப் பதக்கம் வென்ற பளுதூக்கல் வீரர் இசுரு குமார, வெண்கலப் பதக்கம் வென்ற மல்யுத்த வீராங்கனை நெத்மி அஹிம்சா ஆகியோருக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. எனினும், ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற யுபுன் அபேகோன் இத்தாலியில் வசிப்பதால் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம், அதன் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா, இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி அமல் ஹர்ஷா டி சில்வா, கிறிஸ்ப்ரோ நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் அமோரிஸ் சீலர் மற்றும் இலங்கை பொதுநலவாய விளையாட்டுக் குழுவின் செயற்பாட்டு பிரதானி தம்பத் பெர்னாண்டோ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## இலங்கைக்கு ஆதரவு வழங்க பிஃபா உறுதி



இலங்கை கால்பந்து சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர், சர்வதேச கால்பந்து சம்மேளனத் (பிஃபா) தலைவர் ஜியானி இன்பான்டினோவை கடந்த வாரம் கட்டாரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதில் கால்பந்தாட்ட அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் கால்பந்தாட்டத்தின் மூலம் சமூகத்திற்கு உதவக்கூடிய அனுகூலமான செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் விரிவாக கலந்துரையாடினர்.

இலங்கை கால்பந்து சம்மேளன யாப்பு விதிகளில் திருத்தங்கள் செய்வதற்கும் அடுத்த நான்கு வருட கால தவணைக்குரிய நிர்வாக உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் திகதியை ஏற்பாடு செய்வதற்கும் தற்போது எடுத்துவரும் முயற்சிகளுக்கு தனது ஆதரவை வழங்குவதாக பிஃபா தலைவர் இதன்போது உறுதியளித்தார்.

இந்த செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக பிஃபா மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளன உயர்மட்ட இணை பணிக் குழுவினர் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிஃபா அறக்கட்டளையின் கீழ் 'பாடசாலைகளுக்கான கால்பந்தாட்டம்' என்ற புதிய திட்டத்தை ஆரம்பிப்பதற்காக பிஃபா தலைவர் ஜியானியும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமரும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் அடுத்த மாதம் கைச்சாத்திடவுள்ளனர்.

அதன் மூலம் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளுக்கு கால்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் பயிற்சிகளுக்கான ஆதரவும் அளிக்கப்படவுள்ளது.

## மாவட்ட சம்பியனானது அக்கரைப்பற்று அணி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

2022ஆம் ஆண்டுக்கான அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் சம்பியனாக அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) அக்கரைப்பற்று பொது மைதானத்தில் அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அமீர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கல்முனை பிரதேச செயலக அணியை எதிர்த்து விளையாடிய அக்கரைப்பற்று அணி 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதோடு, அக்கரைப்பற்று அணியின் வீரர் மாஜீத் இரண்டு கோல்களை புகுத்தி அக்கரைப்பற்றின் வெற்றியை உறுதி செய்தார்.

## மேல் மாகாண சுற்றுக்கு 'அல் பஹ்ரியா' தகுதி

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

கல்வி அமைச்சின் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் களுத்துறை வலய பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் பாணந்துறை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை அணி களுத்துறை கல்வி வலய சாம்பியனாக தெரிவாகி மேல் மாகாண சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. களுத்துறை வலய பாடசாலைகளுக்கிடையிலான 18 வயது பிரிவின் இறுதிப் போட்டியில் தர்கா நகர் சாஹிரா அணியும் அல் பஹ்ரியா அணியும் மோதின. இதில் அல் பஹ்ரியா அணி சிறப்பாக ஆடி வெற்றியீட்டியது.



## சொந்த மண்ணில் 100 டெஸ்ட்: 40 வயது அண்டர்சன் சாதனை

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் தனது நாட்டுக்காக சொந்த மண்ணில் 100 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையைப் படைத்துள்ளார்.



கிரிக்கெட் வீரர் ஒருவர் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக தனது சொந்த மண்ணில் 100 போட்டிகளில் விளையாடியுள்ளது இதுவே முதல் முறையாகும்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக மான்செஸ்டரில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கியதன் மூலமே அவர் இந்த சாதனையை படைத்தார்.

தனது 19 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் அண்டர்சன் இந்த சாதனையைப் படைத்துள்ளார். 40 வயதான அண்டர்சன் மொத்தமாக இதுவரை 172 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இதற்கு முன்னதாக கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் சொந்த மண்ணில் அதிக போட்டியில் விளையாடிவர் என்ற பட்டியலில் முன்னிலையில் இருந்தார். சச்சின் டெண்டுல்கர் தனது 23 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் சொந்த மண்ணில் 94 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

## உலகக் கிண்ண டி20:
## இந்திய–பாக். போட்டியை நின்று பார்ப்பதற்கும் டிக்கெட் விற்பனை

உலகக் கிண்ண டி20 கிரிக்கெட் தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் மோதும் ஆட்டத்தின் டிக்கெட்டுகள் அனைத்தும் விற்று தீர்ந்ததால், நின்று பார்க்க 4 ஆயிரம் டிக்கெட்டுகளை கூடுதலாக விற்க போட்டி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

ஆடவருக்கான உலகக் கிண்ண டி20 கிரிக்கெட் தொடர் வரும் ஒக்டோபர் 16 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. அதன் சுப்பர் 12 சுற்றின் 2ஆவது பிரிவில் உள்ள இந்தியா–பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் ஒக்டோபர் 23ஆம் திகதி மெல்போர்னில் நடைபெற உள்ளது.

இந்த ஆட்டத்துக்கான டிக்கெட்டுகள் 5 நிமிடங்களில் விற்று தீர்ந்து விட்டன. இதனையடுத்து ஐ.சி.சி அனுமதியுடன் மேலும் 4 ஆயிரம் டிக்கெட்டுகளை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளனர். ஆனால் அந்த டிக்கெட்டுகளை வாங்குபவர்கள் நின்று கொண்டுதான் போட்டியை பார்க்க முடியும். கால்பந்தில் ஆட்டங்களை நின்று கொண்டு பார்க்க தனி கேலரிகள் இருக்கும். அதுபோல் கிரிக்கெட்டு ஆட்டத்தை காணவும் சில அரங்கங்களில் இப்படி அறைகள் இருந்தபோதும் அதிகம் பயன்பட்டதில்லை.

மெல்போர்ன் கிரிக்கெட் அரங்கில் ஒரு இலட்சம் இருக்கைகள் உள்ளன. அதில் 1970ஆம் ஆண்டு அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 696 பேர் அனுமதிக்கப்பட்டனர். எனவே இந்த 4 ஆயிரம் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும்.



# நகர்வலம்



## இலங்கை – இந்தோனேசியா 70 வது ஆண்டு நட்புறவு பூர்த்தி விழா







இலங்கை - இந்தோனேசியா நாடுகளுக்கிடையே இராஜதந்திர தொடர்புகள் ஏற்படுத்தி 70வது ஆண்டு நிறைவு விழா இந்தோனேஷியா உயர்ஸ்தானிகர் டேவி கஸ்டினா டொபிங் ( Dewi custina Tobing) தலைமையில் கொழும்பு இந்தோனேசியா உயர்ஸ்தானிக காரியாலயத்தில் அமைந்துள்ள ரிப்டாலொகா (Riptaloka) மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதம விருந்தினராக நீதி,சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தார். இதில் சர்வமத தலைவர்களான வணக்கத்துக்குரிய சோமானந்த தேரர், கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா, அருட்தந்தை அனுரா பிரீஸ், மௌலவி நுஸ்ரத் நௌபர், வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆகியோர் கலந்து கொண்டனர். குறித்த நிகழ்வின் போது இந்தோனேசியா உயர் ஸ்தானிகர் மற்றும் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா ஆகியோர் ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்திக் கொண்டனர்.




கொழும்பு விவேகானந்தா கல்லூரி 1996 ஆம் ஆண்டு க. பொ. சாதாரண 11E யில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் கல்லூரிக்கு "ஸ்மார்ட் போர்டு" (Smart Board) வழங்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் ரவி சந்திரிக்கா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பி.ரிஷாந்த், வி.ராமகிருஷ்ணன், சு.ராஜேந்திரன், வி.ஜெகதீசன், பி. ரமேஸ்குமார், ப.மா.ச.தலைவர் யெ. ரவீந்திரகுமரன் ஆகியோர் இணைந்து அதிபர் ரவிசந்திரிக்காவிடம் கையளித்தனர். பாடசாலை சார்பில் உதவி அதிபர்களான தெ.தேவசியானி, க.குணசுந்தர், ஸ்ரேன்லி ரஞ்சித் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் இலங்கை மக்களுக்கு வழங்கிய நிவாரண பொருட்கள் (மட்டக்குளி, முகாத்துவாரம், மத்திய ரோட், சென் மேரிஸ் பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இவை முகாத்துவார லாஹிர் ஹாஜியாரின் வீட்டில் வைத்து பங்கிடப்பட்டன. அமைப்பாளர் மொஹமட் நவுசாட் அருகில் நிற்பதை படத்தில் காணலாம்.

படம்: எம். நசார்

## தவத்திரு தனிநாயகம் அடிகள் புலமைப்பகிர்வு, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் எண்பதாம் ஆண்டு – "அமுத விழா"



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் எண்பதாம் ஆண்டு "அமுத விழா" தொடக்க நிகழ்ச்சியும் தவத்திரு தனிநாயகம் அடிகள் புலமைப்பகிர்வும் நிகழ்வு 2022.08.31ம் திகதி புதன்கிழமை பி.ப.5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. "மேலைநாடுகளுக்கு தமிழியல் ஆய்வு சென்றடைந்த வரலாறும் தவத்திரு தனிநாயகம் அடிகளும்" என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக, தமிழ் இலக்கியத்துறை மேனாள் தலைவருமான பேராசிரியர் வீ.அரசு சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். நன்றி உரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தவுள்ளார்.









பேராசிரியர் ம. முகம்மது உவைஸ் அவர்களின் புலமைப்பகிர்வு கொழும்புத்தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் கொழும்புத் தமிழ்ச்சங்க இலக்கியக்குழு செயலாளர் தெ. மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கொ. த. சங்க துணைக்காப்பாளர் கலாநிதி க.இரகுபரன், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி உதவிப் பொதுச்செயலாளர் எம். எச். எம். ஹஸன் ஆகியோர் உரையாற்றினார்கள்.







கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் சமீபத்தில் அமரத்துவம் அடைந்த எழுத்தாளர் மயிலங்கூடல் பி.நடராசா, மாஸ்டர் சிவலிங்கம், ஆர்.எஸ்.நடராசா, தெணியான் கந்தையா நடேசு ஆகிய கலைஞர்களின் நினைவுப் பகிர்வு அண்மையில் சங்க வினோதன் மண்டபத்தில் சங்கத்தின் துணைத் தலைவர் மா.கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அமரத்துவம் அடைந்தவர்களின் சார்பில் இராஜி கங்காதரன், வசந்தி தயாபரன், மா.கணபதிப்பிள்ளை, வைத்தியகலாநிதி ச.முருகானந்தம் ஆகியோர் உரையாற்றியதுடன் அஞ்சலி செலுத்தினார்கள்.







பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினூடாக 15 மாவட்டங்களில் இயங்குகின்ற 35 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுக்கும் தூரநோக்கு சிந்தனையில் 490 மில்லியன் ரூபாய் பெறுமதியான குடிநீர் விநியோகிக்கும் பவுசர் வழங்கும் நிகழ்வு பிரதமரும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவின் தலைமையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் அண்மையில் இடம்பெற்றது. இதனடிப்படையில் வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கும் வெங்கள செட்டிகுளம் பிரதேச சபைக்கும் மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேச சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளுக்கான குடிநீர் விநியோகிக்கும் பவுசரை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானினால் அந்தந்த பிரதேச சபை தவிசாளர்களுக்கு கையளித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## மீண்டும் வருவேன்

ஆண்டு ஐந்து கடந்தும்
ஆறாத காட்சியாய்
வளர்பிறைபோல்
தெரிகிறது
மீண்டும்
கஃபா காண

இரு நகரில்
தடம்பதித்த நினைவுகள்
நெஞ்சில்
ரீங்காரமாய் தினம்
நிழலாட

ஸம்ஸம் நீரை
பருகி முழுகி
புத்தூக்கம் பெறும்
நாளெப்போது

நாற்திசை அதான்
கேட்டு
வந்த பட்டாளத்தில்
நானும் இணைகிறேன்
நின்ற இடத்தில்
சுஜூது செய்யும்
நின் காட்சி
உடலுக்கு இதமல்லவா!

அறபா மைதானத்தில்
அண்ணல் நபிகள்
கன்னல் மொழியில்
கேட்ட துஆ
காதில் ஒலிக்கிறது!

தாயிப் நகரப் பயணம்
தாஹா நபியின்
துயர்சுமந்த வாழ்வு
தஹஜ்ஜுதும்
தொழுகையும்
திக்ரே கல்பியும்
இதயத்தின் ஊற்றல்லவா

கேட்ட துஆக்கள்
கொஞ்சமா
இரண்டில் ஒன்றைத் தந்தாய்
மரணம் வருவதற்குள்
அடுத்ததும்
கபூலாகனும்

உம்ரா முடிந்தாலும்
எனக்கான ஹஜ்
கடமையுண்டு
காலன் வருவதற்குள்
காத்திருக்கிறேன்
அதற்காக

தோப்பூர் எஸ் சிறாஜுதீன்
நற்பிட்டிமுனை

## காதலின் சின்னம்



குழந்தை பருவத்தில்
அழக்கூட தெரியாத எனக்கு
குமரி நீ
அழ வைத்து
அறிமுகமானது ஏனடி!

மனமுருகி
மூளை முடுக்கெல்லாம்
உன் பேரை எழுதி வைத்து
என்னை நான்
மறந்திருந்தேன்!

மிஞ்சியிருந்த காலங்களில்
சுலைஹா தாயின் மடியில்
உறங்கிய நாள் வசந்தமடி!

உன் நினைவில்
வாழ விரும்பவில்லை!
உனக்கு நினைவுகள்
இருக்கும் வரைக்கும்
வாழ்ந்து பார்க்கிறேன்!

என் இதழில் இருப்பது
சிகரெட் அல்ல
நம் காதலின் சின்னமாய்
நானே எனக்கு வைத்த
நெருப்புக் கொள்ளி!

T. L. நசீம்
கிண்ணியா 01

## விடியல் காண்பாய் எம் தேசமே!

கல்வி அழியுது; பல கலைகளும் அழியுது!
நாடோ முடங்குது; சிலர் பாடோ அடங்குது!
இந்து சமுத்திரத்தின் முத்து பரிதவிக்குது!
இதர நாட்டின் சொத்தாய் வலி அனுபவிக்குது!

விலைவாசி விண் வரை தாவிக் குதிக்குது!
விடியல் தேடி மனம் ஏங்கித் தவிக்குது!
அகங்கார பேய்கள் நாட்டை ஆட்டிப்படைக்குது!
சுயநலப் பிசாசுகளோ பொருள் பதுக்கி குளிர் காயுது!

அரசியலோ மர்மமாய் மயங்கிக் கிடக்குது!
ஊழல்களோ அதில் தலை விரித்தாடுது!
வரிசைகளோ மனித வாழ்வை பந்தாடுது!
சில உயிர்களோ அதில் தினம் பலியாகுது!

எரிவாயுயின்றி அடுப்போ தூங்கிக் கிடக்குது!
எரிபொருள் தேடி காலோ கட்டையாகுது!
உணவு இன்றி பல குடும்பம் வாடுது!
ஏழை உயிர்கள் பல தினமும் மாயுது!

மின்சாரமோ தினம் மெழுகாகுது!
பால்மாஇன்றி குழந்தை பதறி அழுகுது!
அத்தியாவசியம் இன்று அநாவசியம் ஆகுது!
அடிப்படைத் தேவை இன்று கடப்படி தாண்டுது!

ஈழத்தாயோ தினம் இருளில் மூழ்குது!
ஈவு இன்றி சர்வதேசம் கை நழுவுது!
கடன் சுமையால் கப்பல் பாதியில் நிற்குது!
டொலர் இன்றி வட்டி வானைப் பிளக்குது!

தொழிலுமின்றி ஆண்வர்க்கம் அவதியுறுகுது!
வெளிநாடு தேடி அவர்கள் மனமோ விரையுது!
வருவாய் இன்றி கொலை, கொள்ளை அதிகரிக்குது!
கொடுமையாய் மனிதம் மரணித்து போகுது!

மனித மனங்களோ மலடாய்க் கிடக்குது!
மனித நேயமின்றி மிக வரண்டு போகுது!
வலித்து வலித்து வாழ்க்கை வெறுக்குது!
மாற்றம் தேடி மனமோ துடிக்குது!

என்றோ இந்நிலை மாறும் என மனம் ஏங்குது!
எம் ஈழத்தாய் நிலை எண்ணி
கண்ணோ தினம் கலங்குது!
விடியல் காண்பாய் எம் தேசமே!
காத்திருக்கின்றோம் உனக்காகவே!

பாத்திமா ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி

## கிரிக்கெட் காண வந்த கடவுள்




அவர் வந்துவிடுவதற்கான
முன்னறிவிப்புக்கள் ஏதும்
இல்லாதபோதும் விளையாட்டு
ரசிகர்களால் மைதானம்
நிரம்பி வழிந்தது .

அவர் வருவதுபற்றி
அறிவிக்கப்பட்டிருந்தால்
டிக்கெட் விற்பனை தடைபட்டிருக்கலாம்
என்பதாலோ அல்லது அவர்
வருவதற்கான அறிகுறிகள்
தென்படாதக் காரணத்தாலோ
அவர் வருகை அறிவிக்கப் படாததால்
ஊரே களைக்கட்டியிருந்தது

மதிய இடைவேளை வரையிலும்
வாராத கடவுள் விளையாட்டின்
மும்முரத்தை அவதானித்துவிட்டு
வானத்தின் மேலாக மெல்லக்
கரியநிறத்து முகில்களினூடே
தன்னுடைய வருகையை
விளம்பரப்படுத்தத் தொடங்கியிருந்தபோது
விளையாட்டில் மெய்மறந்திருந்த
இரசிகர்கள் கிரிக்கட்டைத்
தெய்வமாக வழிபட்டுக் கொண்டிருந்தார்கள் .

கடவுள் மெல்ல மெல்ல
இறங்கிவந்து மைதானத்துக்குள்
திடீரென நுழைந்தபோது
விளையாட்டு வீரர்கள் நடுவர்கள்
எல்லோரும் அரங்கத்தினுள்
நுழைந்து கொண்டார்கள்.

விறுவிறுப்பான போட்டியொன்றை
பாதியில் இடைநிறுத்தியக்
கடவுளின் வருகையால்
முகம் சுழித்த இரசிகர்கள்
வாங்கிய டிக்கட் பணம் வீணான
வருத்தத்தில் கடவுள்மேல்
ஆத்திரப்பட்டுத் திட்டினார்கள் .
ஒருசிலர் சற்று நேரத்தில்
கடவுள் போய்விடுவார்
மீண்டும் போட்டி ஆரம்பமாகும்
என்ற நம்பிக்கையில் இருக்க
கடவுளோ எவரையும்
வெளியே செல்லவிடாதவாறு
மைதானத்திற்கு வெளியிலும்
வியாபித்திருந்தார்.


முடிவு என்னவாகுமோ என்ற
வருத்தத்தில் இருந்த
இரசிகர்களுக்கு போட்டி
வெற்றித் தோல்வியின்றி
முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டபோது
ஏமாற்றப்பட்ட மனசோடு
கடவுளை கண்டிக்க வழியின்றி
கடவுள் போகும்வரை நின்றிருந்து
கடவுள் போனதும் கவலையோடு
போகத் தொடங்கினார்கள்

ஊரெங்கும் வியாபித்திருந்தக் கடவுள்
வெளியேறிய வேளை
வெளியில் வந்து தங்கள் வயல்
வெளிகளை பார்த்து
ஊர்க்கார உழவர்கள்
சொல்லத் தொடங்கினார்கள்
இம்முறை அமோக விளைச்சல் கிடைக்குமென்று

விவசாயிகளைப் பார்க்கவந்தக் கடவுளை
விளையாட்டு பார்க்க வந்தக் கடவுளாகக்
கருதிக் கொண்டவர்கள் மட்டுமே
புலம்பியிருந்தார்கள் கடவுளை
மழை என்று.

மெய்யன் நடராஜ்

## ஆசான்




பிரசவிக்கா குழந்தைகளை
வளர்த்தெடுக்க
தன்னுயிரை
தானம் செய்யும்
தியாகிகள் ஆசான்கள்

பெற்றோருக்கு சில
குழந்தைகள்
ஆசானுக்கு
ஆயிரம் குழந்தைகள்
அனைத்தையும்
பக்கச்சார்பின்றி
கல்வி என்னும்
உணவூட்டி
வளர்க்கும் பெற்றோர்
ஆசான்கள்

ஒன்றும் அறியா
மாணவ ஜீவன்களை
பாரினை வென்றிடும்
வல்லவர்களாய்
மாற்றிட
வெண்துகல்களை
உமிழ்ந்திடும்
தியாகிகள்

தான் கற்ற
கல்விதனை குறைவின்றி
மெருகூட்டி தாராளமாய்
வாரி வழங்கி
மாணவர்களின்
உயர்வில்
உற்சாக மகிழ்வில்
ஆனந்தம் கொள்ளும்
எதிர்பார்ப்பில்லா
ஜீவன்

இளமை முதல்
முதுமை வரை
கல்விப்பசி போக்கும்
தன்னலம் என்னாத
ஓய்வினை விரும்பா
ஜீவன் ஆசான்கள்

ஆசானாய் இருந்து
ஆயிரம் பதவிகளுக்கு
ஆளாக்கும் ஆசானை
மாணாக்கர்
என்றும் மறவோம்
ஆசான்களை.

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்

## எக்காள சிரிப்புடன் எழுந்து வருகிறாள் பில்கீஸ்...



உறங்க மறுத்த விழிகளை
வலிந்து பிடித்து மூடுகிறேன்
ஆபியாவும் ஆயிஷாவும்
வித்யாவும் நிர்பயாவுமென நீளும் வரிசையில்
எக்காள சிரிப்புடன் எழுந்து வருகிறாள் பில்கீஸ்...

பாசிச பேய்களின் நிலங்களிலிருந்து
சாதி சனம்
இனம் குலமென
கறை பிடித்த நாக்குகளை தொங்கவிட்டபடி அலையும்
எச்சில் நாய்களின் நடுவே
எக்காள சிரிப்புடன் எழுந்து வருகிறாள் பில்கீஸ்...

மலம் தின்னும் நாய்களின் விடுதலை
மலர்களின் வாசத்தை
மிஞ்சி விடப்போவதில்லை.
கூடிப் புணர்ந்து கொன்றொழித்தவனின் குரல்வளையை
நெரித்தவள் நானென
எக்காள சிரிப்புடன் எழுந்து வருகிறாள் பில்கீஸ்...

உலகின் அசைவை உயிர்ப்பெண்மையில் வைத்த
இறையருள் போர்த்திய எனக்குள்
கழிசடைகளின் பீய்ச்சல்கள்
என்ன செய்யுமென
வெந்து குழைந்த பின்னும்
வெறிபிடித்த மிருக பிராண்டல்களில்
நொந்து சிதைந்த பின்னும்
உங்களை அதிரச் செய்தவள் நானென
எக்காள சிரிப்புடன் எழுந்து வருகிறாள் பில்கீஸ்...

நான் நீங்கள்
நாம் அவர்களென
நீளும் பிராத்தனைகள் தோறும்
உயிர்ப் பெற்றெழுகிறது
பில்கீஸின் குரல்!

மாத்தளை ஜெஸீமா ஹமீட்



## மனித நேயம் மலர்கவே!

மனித நேயம் மலர்கவே!
இனிமை எங்கும் படர்கவே!
அன்பு கருணை வளர்கவே!
ஆன்ம பலமும் சேர்கவே!

மனிதப் பண்பு நிறைந்து நிறைந்து
மண்ணில் பகைமை மறைந்து மறைந்து
இனங்கள் இணைந்து
இதயம் குளிர்ந்து
முரண்கள் தவிர்த்தே வாழுவோம்
மனித நேயம் மலர்கவே
இனிமை எங்கும் படர்கவே!

சற்குணங்கள் வளர்ந்து வளர்ந்து
சாத்வீகம் மிளிர்ந்து மிளிர்ந்து
உள்ளம் மலர்ந்து
உறவில் சிறந்து
இன்ப மாக வாழுவோம்
மனித நேயம் மலர்கவே!
இனிமை எங்கும் படர்கவே

வேதவிளக்கம் அறிந்து அறிந்து
போதனைகள் புரிந்து புரிந்து
உண்மை உணர்ந்து
புன்மை தவிர்த்து
நன்மை செய்தே வாழுவோம்!
மனித நேயம் மலர்கவே
இனிமை எங்கும் படர்கவே!

பாலமுனை பாறூக்